பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 13 செவ்வாய்க்கிழமை (25-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:91

பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக

# இதுவரை அறிக்கை எதையும் நம்பியார் சமர்ப்பிக்கவில்லை!

## உதயனுக்கு அளித்த விசேட பேட்டியில் அவரே தகவல்

புதுடில்லி,பெப்ரவரி25

**"உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக இதுவரை எந்த அறிக்கையையும் நான் இலங்கை அரசுக்குச் சமர்ப்பிக்கவில்லை.**

**" உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியமர்வதை புலிகள் கனரக ஆயுதங்களைக் கீழே வைக்கும் நிபந்தனையோடு தொடர்புபடுத்தி பூர்வாங்க அறிக்கை ஒன்றை நான் இலங்கை அரசுக்கு வழங்கியிருப்பதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறு."**

**- இப்படித் தெரிவித்திருக்கின்றார் ஜெனரல் சதீஷ் நம்பியார்.**

'உதயன்' பத்திரிகைக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

*கேள்வி:-* உள்ளூரில் இடம்பெயர்ந்த அகதிகள் வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மீளக் குடியமர்வதற்கு விடுதலைப் புலிகள் தங்களின் கனரக ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கும் வகையில் பூர்வாங்க அறிக்கை ஒன்றை இலங்கை அரசுக்கு நீங்கள் சமர்ப்பித்திருக்கின்றீர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் 'ஏ - 9' வீதி புனரமைப்பை பார்வையிட்டனர்

வவுனியா,பெப்.25

ஏ - 9 கண்டி வீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகளை ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் நேற்றுப் பார்வையிட்டனர்.

இந்த வீதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு, அகலமாக்கப்படவிருக்கின்றது. இந்தப் பணிகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று வவுனியா வந்த அந்த அமைப்பின் அதிகாரிகள் கண்டி வீதியைப் புனரமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஆரம்பப் பணிகளைப் பார்வையிட்டனர்.

அதன்பின்னர் வவுனியா செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றிலும் அவர்கள் பங்குபற்றினர்.

வவுனியாவில் வீதிப்புனரமைப்பு, மின்விநியோகம் ஆகியன தொடர்பாக திட்டங்கள் குறித்து அக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (ம-3-164)



கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதிவண. ஒஸ்வால்ட் கோமிஸ் தலைமையிலான ஆயர்கள் நேற்றிரவு யாழ்.ஆயர் இல்லத்தை வந்தடைந்த போது எடுக்கப்பட்ட படம். (படம்: ரமணன்)

## குறிப்பிட்ட ஒரு சிறு குழுவே தெற்கில் சமாதானத்துக்கு எதிராக செயற்படுகிறது

### தமிழ்ச்செல்வனிடம் ஆயர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.25

தெற்கிலுள்ள குறிப்பிட்ட சிறு குழுவே சமாதானத்துக்கு எதிராகச் செயற்படுகின்றது. அந்தக் குழுவால் சமாதான முயற்சிகளைக் குழப்ப முடியாது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்த எட்டு ஆயர்களும் மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனிடம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வரும் வழியில் எட்டு ஆயர்களும் கிளிநொச்சியில் நேற்று மாலை 5 மணிக்கு தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இரண்டரை மணி நேரம் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தற்சமயம் இடம்பெறும் பேச்சுக்கள் குறித்து தமிழ்ச்செல்வன் ஆயர்களுக்கு விளக்கினார்.

"சமாதான நடவடிக்கைகளை பெரும்பாலான மக்கள் ஆதரிக்கிறார்கள். நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாகும்.

"சிறு எண்ணிக்கையான பிக்குகள் அங்கம் வகிக்கும் அமைப்புகளும் ஜே.வி.பி. போன்ற பேரினவாத சக்திகளும் தெற்கில் சமாதானத்துக்கு எதிராகச் செயற்படுகின்றனர். அவர்கள் தான் சமாதானத்தைக் குழப்பமுனைகின்றனர். அவர்களால் இதைச் சாதிக்க முடியாது என்பதே எமது கருத்தாகும்" என்று ஆயர்கள் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தனர்.

ஆயர்கள் ஏ-9 வீதியூடாக இரவு 10 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்துக்கு வந்து சேர்ந்தனர். (ம-3)

சர்வமதக் குழுவினரின் ஏற்பாட்டில்

## நிலையான சமாதானம் வேண்டி ஆதீனத்தில் மௌனப் பிரார்த்தனை

### 100 பிக்குமார்களும் பங்குபற்றினர்

யாழ்ப்பாணம்,பெப்.25

நிலையான சமாதானத்தை வலியுறுத்தி நல்லை ஆதீனத்தில் நேற்று மாலை 4.30 மணிக்கு சர்வமதக் குருமாரின் மௌனப்பிரார்த்தனை இடம்பெற்றது. தெற்கில் இருந்து வந்தசர்வமதக் குழுவினரும் இதில் கலந்து கொண்டனர்.

நல்லைக்கந்தன் ஆலயத்தில் இருந்து சர்வமத குருமார் ஆதீன மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

முதலில் இந்துக்குருமார் ஆசி வழங்கினர். அதைத்தொடர்ந்து பௌத்த துறவிகளும், கிறிஸ்தவமத

(14ஆம் பக்கம் பார்க்க)




நல்லை ஆதீனத்தில் நடந்த பிரார்த்தனையில் தெற்கில் இருந்து வந்த பிக்குமார்கள் ஈடுபட்டுள்ள காட்சி.

## 18 வருட போரில் அழிந்த சொத்துக்களின் மொத்தப் பெறுமதி 40, 300 கோடி ரூபா

கொழும்பு,பெப்.25

1983ஆம் ஆண்டுமுதல் 2001ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் யுத்தத்தினால் அழிந்த சொத்துக்களின் மொத்தப் பெறுமதி சுமார் 40 ஆயிரத்து 300 கோடி ரூபா என இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

அவ்வாறே, யுத்தத்தினால் இறந்தோரின் எண்ணிக்கை 60 ஆயிரத்துக்கும் 80 ஆயிரத்துக்கும் இடைப்பட்டதாக இருக்கலாம் எனவும் தெரிவித்திருக்கும் மத்தியவங்கி, இறந்தோரின் எண்ணிக்கையை திட்டவட்டமாக கணக்கிடுவது சிரமமான காரியம் எனவும் கூறுகின்றது.

மத்திய வங்கி தெரிவித்திருக்கும் ஏனைய தகவல்கள் வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 23 ஆயிரம். அப்பிரதேசத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை 1,05,500 எனக் கணிக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை மேலும் உயரலாம்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு கழியும் வேளையில் உயிரிழப்புகளோ, சொத்து அழிவுகளோ ஏற்படாதது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

- இவ்வாறு மத்திய வங்கி தெரிவித்திருக்கிறது. (ம)

## குச்சவெளியில் நடந்தது என்ன? கண்காணிப்புக்குழு விளக்கம்

கொழும்பு,பெப்.25

திருகோணமலை மாவட்டம் குச்சவெளிப் பகுதியில் இருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் குழுவாக வந்து கொண்டிருந்த 7 புலிகளை கடற்படையினர் இடைமறித்தனர். உடனே கடற்படையினர் தம்மை வந்து அணுகாதபடி தடுக்கின்ற நிலைகளை புலிகள் எடுத்துக்கொண்டனர். கடற்படையினர் புலிகளை சுற்றிவளைத்து நின்றனர். இரு தரப்புக்குமிடையே 50 மீற்றர் இடைவெளி மாத்திரமே இருந்தது. இந்தத்தகவல் கிடைத்ததும் நாம் மூன்று கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை சம்பவ இடத்துக்கு அனுப்பினோம்.

திருகோணமலை மாவட்டம் குச்சவெளியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா கடற்படையினரும் ஒருதரப்பை மறுதரப்பு - பெருத்த எடுப்பில் - மாறி மாறி சுற்றிவளைத்துக்கொண்ட சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழுவின் ஹெறாக்லன்ட் மேற்கண்டவாறு கூறினார்.

சம்பவம் தொடர்பாக அவர் தொடர்ந்து கூறியதாவது:

கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு போய்ச்சேர்வதற்கு முன்பதாக இரு தரப்பினரும் மேலதிக ஆள்களை சம்பவ இடத்துக்கு வர

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

SHARP
தரமானதுடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
14, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296 A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# ஆஸிக்கு மாறுகிறார் அன்டி பிளவர்?

ஸிம்பாப்வே அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான அன்டி பிளவர் அவ்வணியிலிருந்து விலகி ஆஸ்திரேலியாவில் விளையாடப் போவதாக அறிவித்துள்ளார்.

ஸிம்பாப்வேயில் மனித உரிமைகள் மீறப்படுவதாக குற்றஞ்சாட்டிய வீரரான அன்டி பிளவரும், வேகப் பந்து வீச்சாளரான ஒலங்காவும் உலகக் கிண்ணப் போட்டிகளில் கையில் கறுப்புப்பட்டி அணிந்து விளையாடி வருகின்றனர். ஆனால், கறுப்புப்பட்டியைத் தொடர்ந்து அணிந்தால் உலகக் கிண்ணத்துக்கான ஸிம்பாப்வே அணியில் இருந்து நீக்கப்படுவீர்கள் என்று ஸிம்பாப்வே கிரிக்கெட் யூனியன் அவர்களை எச்சரித்துள்ளது.

இதனால், ஆஸ்திரேலியாவில் விளையாடுவதற்கு அன்டி பிளவர் தீர்மானித்துள்ளார்.

"ஆஸ்திரேலியாவில் உள்ள மாகாண அணி ஒன்றுடன் விரைவில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்போவதாக அன்டி பிளவர் கூறியுள்ளார்.

"ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உள்நாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், ஆஸ்திரேலியா வருவதற்கும் மிகவும் விருப்பமுடன் இருக்கிறேன்.

"ஸிம்பாப்வேயில் நடைபெறும் சம்பவங்கள் கடினமான, சிக்கலானதாகவுள்ளது. ஏற்கனவே, ஆஸ்திரேலியாவில் விளையாடி இருப்பதாலும், அங்கு எனக்கு ஒரு தற்காலிக வீடு இருப்பதாலும், ஆஸ்திரேலியாவில்

(13ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய ஆட்டத்தில் அரைச் சதம் அடித்த அன்டிபிளவர்.



மார்வன் அத்தப்பத்துவை (இடது) ஆட்டமிழக்கச்செய்த மகிழ்ச்சியில் கென்ய பந்து வீச்சாளர் ஒடுயா.

# இலங்கைக்கு வந்த சோதனை

பங்களாதேஷ் அணியை வென்றதும் சனத் ஜெயசூரிய சொன்னது, "உலகக் கிண்ணத் தொடரின் எந்த ஓர் ஆட்டத்திலும் தோற்காமல் கிண்ணத்தைக் கைப்பற்றுவோம்" என்று. கென்யா தமக்கு ஒரு மிகப் பெரும் அதிர்ச்சியைத் தரும் என்று அப்போது அவர் சத்தியமாகக் கனவிலும் நினைத்திருக்கவில்லை. அப்படி ஒரு மிகப் பெரிய அதிர்ச்சித் தோல்வியை அள்ளி வழங்கியது கென்யா. உலகக் கிண்ண தொடரில் கென்யா காட்டிய வித்தை இது.

அவ்வளவாக அறியப்படாத கென்ய 'லெக் ஸ்பின்னர்' கொலின்ஸ் ஒடுயா இலங்கைக்கு எமனாக வாய்த்தார்; கனவுகளைக் கலைத்தார்; அதிரடி மன்னன் ஜெயசூரியவை கண்ணீரில் கரையவிட்டார் அந்த மாயவித்தைக் காரர். அதுமட்டுமா? கென்யாவை 'சுப்பர் சிக்ஸ்'க்கு கொண்டு செல்லக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் அற்புதத்தையும் நிகழ்த்தினார். அவருக்கு வயது 21 மட்டுமே. வரலாற்றில் அவர் பெயர் பதியப்பட்டுவிட்டது. 10 ஓவர்களில் வெறும் 24 ஓட்டங்களை மட்டும் கொடுத்து அவர் வீழ்த்தியது வலிமையான 5 இலங்கை விக்கெட்டுக்களை. இந்தத் தொடரில் சிறந்த பந்து வீச்சுப் பெறுபேறுகளில் அவருக்கு 9 ஆவது இடம். இதுவரை அவர் ஆடிய 18 ஆட்டங்களில் வீழ்த்தியது வெறும் 9 விக்கெட்டுக்கள் மட்டுமே. எந்தவொரு ஆட்டத்திலும் அவர் இதற்கு முன் 2 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தியதில்லை.

1996 உலகக் கிண்ணப் போட்டியில் மேற்கிந்திய அணியை வென்று அதிர்ச்சி கொடுத்தது கென்யா. இப்போது மீண்டும் இலங்கைக்கு அது அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது. 1996 உலகக் கிண்ணத்தில் கண்டியில் வைத்து கென்யாவை வதைத்து 398 என்ற சாதனை இலக்கை எட்டியவர்கள் இலங்கையர்கள். இப்போது நைரோபியில் பழி தீர்த்துக் கொண்டார்கள் கென்யர்கள். நைரோபி வந்திறங்கியபோது, பங்களாதேஷ் மற்றும் கனடா போன்று கென்யா அவ்வளவு சுலபமான அணியாக இருக்காது என்பதை இலங்கை தெரிந்து தான் இருந்தது. ஆனாலும், அவர்களிடம் தோற்போம் என்று அவர்கள் எண்ணியிருக்க நியாயமில்லை. இல்லையெனில் அரவிந்தவின் சாதனைகள் குறித்தெல்லாம் அவர்களின் சிந்தனை சென்றிருக்குமா? கென்யாவை வென்று

(13ஆம் பக்கம் பார்க்க)

# உலகக்கிண்ண துளிகள்

இந்திய அணித்தலைவர் கங்குலி, பொறுப்பை ஏற்றதிலிருந்து ஜோதிடரின் ஆலோசனைப்படி தனது முதலாம் இலக்க மேல் சட்டையைத் துறந்து 99ஆம் இலக்கத்துக்கு மாறினார். எனினும், இந்த உலகக் கிண்ணத் தொடரில் முதல் 3 ஆட்டத்தில் அவர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால் சட்டை இலக்கத்தை மாற்றலாமா? என்று தடுமாறிய கங்குலி நேற்றுமுன்தினம் நமீபியாவுடன நடைபெற்ற ஆட்டத்தில் 24ஆம் இலக்க சட்டையைப் பயன்படுத்தினார். அவர் 112 ஓட்டங்கள் அடித்தார். ஆனால், களத் தடுப்பின்போது அவர் 99ஆம் இலக்க உடையை அணிந்திருந்தார்.

(ம-5)

☆ ☆ ☆

## ஒரு தாயின் விரதம்

இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்லவும் தனது மகன் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதற்காகவும் மொஹமட் கைப்பின் தாய் கேசர் ஜஹான் 2நாள் விரதம் மேற்கொண்டார்.

"அணி உணர்வுடன் வீரர்கள் அனைவரும் ஆட்டத்தில் கவனம் செலுத்தினால் நிச்சயம் இந்தியா மீண்டும் கிண்ணத்தைக் கொண்டுவர முடியும். அதற்காகவே இந்த விரதத்தை மேற்கொண்டேன்" - இவ்வாறு ஜஹான் கூறினார்.

☆ ☆ ☆

## நடுவரை வீழ்த்திய சச்சின்

நமீபியா அணிக்கு எதிரான ஆட்டத்தில் டெண்டுல்கர் அபாரமாக ஆடி 152 ஓட்டங்களைக் குவித்தார்.

அவர் டியோன் கோட்ஸே வீசிய பந்து ஒன்றை தாக்கி அடித்தார். பந்து நேராக நடுவர் ஆலிம்தாரை (பாகிஸ்தான்) நோக்கிப் பறந்து சென்றது. இதைக் கண்ட நடுவர் திகைத்துத் தடுமாறி விலகமுயன்று கீழே விழுந்தார். பந்து நடுவரின் தோள்பட்டையை உரசிச் சென்றது. எனினும், அவர் காயமின்றித் தப்பித்தார்.

☆ ☆ ☆

## தென்னாபிரிக்க வீரர்களுக்கு ஓய்வு

தென்னாபிரிக்க அணி வருகிற 27ஆம் திகதி கனடாவை எதிர்கொள்கிறது. இந்தநிலையில் பங்களாதேஷ் போட்டி முடிந்ததும் தென்னாபிரிக்க வீரர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வீட்டிற்குச் சென்று 2 நாள் தங்கிவிட்டு திரும்ப அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. (ம-5)

# வோர்னுக்குப் பதிலாக ஹௌரிட்ஸ்

சிட்னி,பெப்.25

ஊக்கமருந்து குற்றச்சாட்டுக்குள்ளான ஷேன் வோர்னுக்குப் பதிலாக இளம் சுழற்பந்துவீச்சாளர் நேதன் ஹௌரிட்ஸ் ஆஸ்திரேலிய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

- இவ்வாறு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

இன்று செவ்வாய்க்கிழமை பொசெப்ஸ்ட்ரூம் நகரில் ஆஸ்திரேலிய அணியினருடன் ஹௌரிட்ஸ் இணைந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

21 வயதான நேதன் ஹௌரிட்ஸ் 11 மாதங்களுக்கு முன் சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கு அறிமுகமானார். 5 போட்டிகளில் பங்குபற்றி 7 விக்கெட்டுக்களை அவர் வீழ்த்தியுள்ளார்.

அண்மையில் ஆஸ்திரேலிய உள்ளூர் போட்டிகளில் 14 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். வருடத்தின் சிறந்த இளம் வீரருக்கான பிரட்மன் விருதையும் கடந்த மாதம் அவர் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

"ஷேன்வோர்ன் மீதான விசாரணை தீர்ப்புக் குறித்து நான் ஏமாற்றமடைகின்றேன். சிறுவயதிலிருந்தே வோர்னை எனது ஹீரோவாகக் கருதுகிறேன். இந்நிலையில் அவருக்குப் பதிலாக நான் அணியில் சேர்க்கப்பட்டுள்ளமை பெரும் விசித்திரமானதாகும்."

- இவ்வாறு ஹௌரிட்ஸ் கூறியுள்ளார்.

33 வயதான ஷேன் வோர்ன் ஒரு வருடகாலத் தடையின் காரணமாக அடுத்த வருடம் பெப்ரவரி 10 ஆம் திகதிவரை போட்டிகளில் பங்குபற்றமுடியாதுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-5)

SHARP Action of the day



ஸிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் பொன்டிங்கின் விளாசல்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ்
BROWNS ELECTORINICS Browns

# சுப்பர் சிக்ஸுக்கு செல்வது நீண்ட கனவாக இருக்காது

## கென்ய அணித் தலைவர் தெரிவிப்பு

நைரோபி,பெப்.25

தன்னுடைய அணி உலகக் கிண்ண 'சுப்பர் சிக்ஸ்' கட்டத்துக்கு செல்வது ஒன்றும் நீண்ட கனவாக இருக்காது என்று கென்ய அணித் தலைவர் ஸ்ரீவ் டிக்கோலா தெரிவித்துள்ளார்.

நேற்று நைரோபி ஜிம்கானா அரங்கில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் வென்ற பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

"எங்களது வெற்றி இந்தத் தொடரின் மிகச் சிறந்த அணிகளில் ஒன்றுக்கு எதிராகப் பெறப்பட்ட தொன்று. எங்களுடைய திறமையை வெளிப்படுத்த இது போதுமானது" - என்றார் டிக்கோலா.

"விசேடமாக உலகக் கிண்ணப் போட்டியின் ஆட்டத்தை நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்கள் முன் முதல் தடவையாக ஆடினோம். அதனால் அவர்களை வெல்லுவோம் என்ற நம்பிக்கையும் அதற்கான சாதகமும் எமக்கு இருந்தது" என்றும் டிக்கோலா சொன்னார்.

இனிவரும் ஆட்டங்களில் பங்களாதேஷ் அணியுடனான ஆட்டம் கென்யாவுக்கு இலகுவானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பங்களாதேஷை அது வென்றால் நிச்சயம் 'சுப்பர் சிக்ஸ்' சுற்றுக்கு அதனால் செல்லமுடியும். ஏற்கனவே கனடா அணியை கென்யா வென்றுள்ளது. நியூஸிலாந்து கென்யா சென்று விளையாட மறுத்துவிட்டதால் வெற்றிக்கான 4 புள்ளிகள் கென்யாவுக்கு இலகுவாகக் கிடைத்தன. அதன் மூலம் இப்போது 'பி' பிரிவில் இலங்கைக்கு சமமாக 12 புள்ளிகளைப் பெற்றுள்ளது கென்யா. (ம)

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel AMD Canon EPSON Genius IMATION
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077-7308417
MPAQ COMPUTERS

# அஞ்சலகங்களிலும் இனிமேல் மின் கட்டணங்கள் செலுத்தலாம்

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல அஞ்சல் அலுவலகங்களிலும் உப அஞ்சல் அலுவலகங்களிலும் மின் கட்டணங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் உடனடியாக நடைமுறைக்கு வருவதாக வட மாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என். ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் காணப்பட்ட யுத்தசூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த நடவடிக்கை மக்களின் நன்மை கருதி மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்துக்கு மேலதிகமாக எந்தக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு பற்றுச்சீட்டு வழங்கப்படும் எனவும் இது குறித்து இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருடன் தாம் அண்மையில் கலந்துரையாடியதை அடுத்து இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -

இதனால் மக்கள் எவ்வித சிரமமும் இன்றித் தமக்கு அருகில் உள்ள தபாலகங்களில் கட்டணங்களைச் செலுத்தலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-10)

# வேலையற்ற 25, 000 பட்டதாரிகளுக்கு தொழில் பயிற்சிகள் வழங்கத் திட்டம்

## அமைச்சர்கள் அடங்கிய செயலணி நடவடிக்கை

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கான திட்டமொன்றை அரசாங்கம் வகுத்திருக்கிறது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கென விஷேட செயலணி ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. 'தருண அருண' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இத்திட்டத்தின் மூலம் 25.ஆயிரத்திற்கும் அதிகமான வேலையற்ற பட்டதாரிகள் நன்மை அடைவர்.

தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று முற்பகல் தனது அமைச்சில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இவற்றைத் தெரிவித்தார்.

விசேட செயலணியின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தை அடுத்து அமைச்சர் சமரசிங்க செய்தியாளர்களுக்கு இத்திட்டம் குறித்து விளக்கிக் கூறினார்.

அமைச்சர் சமரசிங்க தலைமையிலான செயலணியில கல்வி, மனிதவள அமைச்சர் பேராசிரியர் கருணாசேன கொடித்துவக்கு, மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர்ஹாசிம், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் உட்பட 28 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

அமைச்சர் சமரசிங்க அங்கு தெரிவித்ததாவது:-

கல்வி அமைச்சும் உயர் கல்வி அமைச்சும் திரட்டிய தகவல்களின் படி 25.ஆயிரத்து 600 வேலையற்ற பட்டதாரிகள் பதிவு செய்துகொண்டுள்ளனர். இவர்களுள் 62 வீதமானவர்கள் கலைப் பட்டதாரிகள், 23வீதமானவர்கள் விஞ்ஞானப் பட்டதாரிகள், 8வீதமானவர்கள் வர்த்தகப் பட்டதாரிகள் இவர்களுக்கான அடிப்படை முகாமைத்துவ பயிற்சிகளை வழங்க உலக வங்கி 100கோடி ரூபா வழங்கியுள்ளது.

எந்தவித அரசியல் தலையீடுகளும் இன்றி திறமை அடிப்படையில் இப் பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் வழங்கப்படும் ஆங்கிலம், கணனி, தொழில்நுட்பம், வர்த்தக முகாமைத்துவம், சிவில் நிர்வாகம் என இப்பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்கப்படும் பயிற்சிக் காலத்தில் விசேட கொடுப்பனவும் வழங்கப்படும். கடந்த காலங்களில் பட்டதாரிப் பயிற்சியாளர்களுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா வழங்கப்பட்டது. இம்முறை இத்தொகை சிறிது அதிகரிக்கப்படக்கூடிய வாய்ப்பும் உண்டு.

ஆறுமாதம் முதல் ஒரு வருடம் வரை பயிற்சி பெறும் இவர்களுக்கு அரசாங்க, தனியார் மற்றும் கூட்டுத்தாபனங்களிலும் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும். அவரவர் விருப்பப்படி வெளிநாடுகளிலும் தொழில் வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

- இவ்வாறு அவர் சொன்னார்.

### ஈழத்தமிழர்கள் மட்டுமன்றி

# மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் சிங்களவரும் பேரழிவை சந்திப்பர்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.25

மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் தமிழருக்கு மட்டுமன்றி, சிங்களவர்களுக்கும் பேரழிவு ஏற்படும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன். புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வெளியிட்ட பகிரங்க அறிக்கையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஒரு வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் நிச்சயமாக நியாயமானவை, தமிழ் மக்களுக்கு சாதகமானவை. கொலைகள் நிறுத்தப்பட்டுள்ளது. துப்பாக்கி சத்தங்களுக்கு முடிவுகட்டப்பட்டுள்ளது. இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில், சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் பரஸ்பர புரிதல் அதிகரித்துள்ளது.

யுத்தத்தின் ஊடாக சமாதானம் என்ற 2001ஆம் ஆண்டு காலகட்டத்தில் கொலைகளும் துப்பாக்கிச் சத்தங்களும் மாத்திரம் தான் நாளாந்தம் கேட்டவண்ணமிருந்தன. பசி, பஞ்சம், பட்டினி, பொருளாதாரத் தடைகள் இவையுடன் ஒப்பிடும் பொழுது 2002 ஆம் ஆண்டு மாற்றங்கள் பாரிய மாற்றங்களே. ஆனாலும், இவையெல்லாம் பேச்சுக்கான சகஜ சூழலை உருவாக்குவதற்கான முயற்சிகளின் வெளிப்பாடுகளே. இறுதிவெற்றியை அடைய இன்னும் பல மைல் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

ஆயினும் மக்களின் மீள்குடியேற்றங்கள் போன்ற விடயங்களில் இராணுவம் ஒத்துழைக்காமல் இருப்பதும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் வளமான நிலப்பரப்புக்களையும், வீடுவாசல்களையும் இராணுவம் தன்வசம் வைத்திருப்பதும் மனக்கிலேசங்களையும், நம்பிக்கையீனங்களையும் உருவாக்குகின்றன.

இராணுவத்தின் இவ் ஒத்துழையாமையானது நாளாந்தப் போராட்டங்களுக்கும் கண்டனங்களுக்கும் கடையடைப்புக்களுக்கும் வழி வகுக்கின்றது. இந்த உணர்ச்சிக் கொந்தழிப்புக்கள் பேச்சுக்களைச் சீர்குலைத்துவிடுமோ என்ற அச்சங்களையும் இடைக்கிடை தோற்றுவிக்கின்றது. மறுபுறத்தில் ஜனாதிபதி, ஜே.வி.பி. போன்ற சக்திகளின் குழப்பகரமான சிந்தனைகளும் செயற்பாடுகளும் பேச்சுக்களை சீர்குலைத்துவிடுமோ? என்ற அச்சத்தையும் உருவாக்கிவருகின்றது.

அது மாத்திரமல்ல இவையெல்லாவற்றையும் மீறி சிலசமயம் இன்னுமொருயுத்தம் ஏற்பட்டால், அது தமிழ் மக்களின் அழிவை மாத்திரமல்ல, பெரும்பான்மையிலான சிங்கள மக்களின் அழிவையும் உள்ளடக்கியதாகவே இருக்கும். எனவே, மொத்தமான நாட்டின் அழிவுக்கு யாரும் காரணகர்த்தாவாக இருக்க விரும்பமாட்டார்கள் என்றும் நம்பலாம். அதேசமயம் விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய தமிழ்க்கட்சிகளுக்கும் முழுத்தமிழ் மக்களுக்கும் ஓர் கடமை உண்டு. அதாவது இன்னுமொரு யுத்தத்திற்கு மக்களைத் தயார் செய்யாமல், நிரந்தர சமாதானத் தீர்வொன்றுக்கும், சமஷ்டி அரசியலமைப்பு முறையிலான சுயாட்சி அதிகாரங்களுக்கும் மக்களைத் தயார் செய்யவேண்டும்.

இதேபோன்று பேச்சு வெற்றிகரமாக நிறைவேறவேண்டுமானால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு பலப்படுத்தப்பட வேண்டும். சில சமயங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும், மீண்டும் அவரை மிகப்பலமான சக்தியாக நாடாளுமன்றம் கொண்டுவர சிங்கள, தமிழ் மக்கள் உறுதியாக செயற்படவேண்டும். இதன் மூலமே யுத்தநிறுத்தத்தையும் பேச்சையும் பாதுகாக்கலாம் என்பதுடன் சமாதானத் தீர்வை எட்டவும் முடியும் - என்றுள்ளது.

### அறவழிப்போராட்ட குழுவின் 24 ஆவது ஆண்டு தினம்

யாழ்ப்பாணம்,பெப்.25

அறவழிப்போராட்டக் குழுவின் 24 ஆவது ஆண்டு நிறைவு தினம் இன்றாகும். இதனையொட்டி கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படவுள்ளதுடன் அன்பளிப்பு பொருள்களும் வழங்கப்படவுள்ளன. (ம-10)

### யோசவ்வாஸ் யாத்திரைத்தலம் திறப்பு விழா

குருநகர்,பெப்.25

யாழ்.கொட்டடியில் அமைக்கப்பட்டுள்ள முத்திப்பேறுபெற்ற யோசவ்வாஸ் யாத்திரைத்தலம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு மறைமாவட்ட ஆயர் ஒஸ்வால்ட் தோமஸ் ஆண்டகையால் திறந்து வைக்கப்படும்.

ஆலயத்திறப்பு விழா நிகழ்வில் இலங்கைக் கத்தோலிக்க மறைமாவட்டங்களைச்சேர்ந்த 8 ஆயர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள். கண்டி மறைமாவட்ட ஆயர் வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம்பெறும். (ம-51-30)

# தோட்டத் தலைவர் மீது தாக்குதல்! 8 பேர் கைது!!

தோட்டத் தலைவர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்குதல் மேற்கொண்ட ஒரு பிரதேச சபை உறுப்பினர் உட்பட எட்டுப்பேர் பதுளைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை, ஸ்பிரிங்வெளி தோட்டத் தலைவர் ஒருவரை, கடந்த சனிக்கிழமை வான் ஒன்றில் அத்தோட்டத்துக்குச் சென்ற கோஷ்டியொன்று கடத்திச் சென்று கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளது. பின்னர் பசறைப் பகுதியில் அவரைக் கைவிட்டுச் சென்றுள்ளது.

பலத்த காயங்களுக்குள்ளான இ.தொ.கா.தோட்டத் தலைவர் தியாகராஜா பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# 'சிரான்' கூட்டம் இம்முறை திருகோணமலையில் நடக்கும்

கிளிநொச்சி,பெப்.25

வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான நடவடிக்கைக்கான உப - குழுவின் கூட்டம் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

உடனடியாக மேற்கொள்ளவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள், உலகவங்கியின் மேற்பார்வையில் புனர்வாழ்வு நிதியம் ஒன்றை ஆரம்பித்தல் என்பன உட்பட பல முக்கிய விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன.

அரசின் சமாதானச் செயலணிப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக தலைமையிலான அரசுக்குழுவும், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் குழுவும் இதில் பங்குபற்றுகின்றன.

உலக வங்கியின் உப - தலைவர் செங்கமன் சான்ஜி விசேடமாக இக் கூட்டத்தில் பங்குபற்றுகின்றார்.

நோர்வே, ஜப்பான் நாட்டுத் தூதர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர்.

உப - குழுவின் கூட்டம் வழமையாக கிளிநொச்சியில் உள்ள 'சிரான்' அலுவலகத்திலேயே இடம்பெறுவது வழமை. முதன்முதலாக திருகோணமலையில் இத்தடவை இடம்பெறவுள்ளது. (ம-3)

### வடக்கு - கிழக்கில் உள்ள

# 41 பாடசாலைகளுக்கு அமைச்சினால் கணனிகள்

திருகோணமலை,பெப்.25

வடக்கு - கிழக்கில் உள்ள 41 பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திப் பிரிவினால் கணனிகள் வழங்கப்படவுள்ளன.

நூலக அடிப்படையிலான மொழி விருத்தி செயற்றிட்ட இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.அனந்தராஜ் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் பாவனைக்கும் நூலக செயற்பாட்டிற்கும், நூலகம் தொடர்பான இணைய செயற்பாட்டிற்குமாக வழங்கப்படவுள்ள இந்தக் கணனிகள் இன்னும் ஒரு வார காலத்துக்குள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, பெரியபுலம் மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, நயினாதீவு மகா வித்தியாலயம், நெல்லியடி மகாவித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், ஆகிய பாடசாலைகளுக்கு இந்தக் கணனிகள் வழங்கப்படவுள்ளன. (ம-ரி)

# பயணிகள் பெட்டிகளை விட்டுவிட்டு தனித்து ஓடியது ரயில் என்ஜின்!

கொழும்பு,பெப்.25

நேற்றுக்காலை பொல்காவலையில் இருந்து கொழும்பு கோட்டையை நோக்கி வந்த ஒரு ரயிலின் என்ஜின் மட்டும் தனித்து ஓடிய ஒரு சம்பவம் மருதானையில் நடைபெற்றது.

மருதானை ரயில் நிலையத்தை வந்தடைந்த இந்த ரயில் அங்கிருந்து புறப்பட்ட பொழுதே பயணிகள் பெட்டிகளில் இருந்து விடுபட்ட ரயில் என்ஜின் தனியே ஓடியது.

இதற்கிடையே கொழும்புக் கோட்டையை நோக்கி நேற்றுக் காலை வந்துகொண்டிருந்த 'சமுத்திராதேவி' ரயிலின் என்ஜின் களுத்துறை பாலத்தின் மீது தடம்புரண்டது. என்ஜினின் நான்கு சில்லுகள் தண்ட வாளத்தை விட்டு விலகின.

இதனால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதோடு பயணிகள் சிரமங்களுக்குள்ளாக்கினர்.

இச்சம்பவங்களுக்கான காரணங்கள் என்ன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. (ம)

# இளைஞர் விவகார அமைச்சர் வியாழனன்று யாழ். வருகின்றார்

யாழ்ப்பாணம்,பெப்.25

இளைஞர் விவகாரங்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொள்ளும் அமைச்சர் அதனைத் தொடர்ந்து துரையப்பா விளையாட்டரங்கை பார்வையிடவுள்ளதுடன் மாவட்ட விளையாட்டு அதிகாரி மற்றும் விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகள், நடுவர்கள் ஆகியோருடனும் கலந்துரையாடவுள்ளார்.

பிற்பகல் 2 மணியளவில் வடபிராந்தியப் போக்குவரத்துச்சபையின் அதிகாரிகளுடனும் அதனைத் தொடர்ந்து மின்சார சபை அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ள அமைச்சர் மாநகர சபையின் ஆணையாளரையும் சந்திப்பார். (ம-10-8)

# சாரதியைக் கொன்று, கடத்திய வான் பொலன்னறுவையில் கண்டுபிடிப்பு

## இருவர் கைது; மேலும் இருவர் தேடப்படுகின்றனர்

கொழும்பு,பெப்.25

கடந்த 19 ஆம் திகதி திகாரிய என்னுமிடத்தில் வைத்து சாரதியைக் குத்திக்கொலை செய்து விட்டு கடத்தப்பட்ட வான் பொலன்னறுவையில் வைத்து பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டது. இரண்டு சந்தேக நபர்களும் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

திகாரியவிலிருந்து வான் ஒன்றை கட்டுநாயக்காவுக்கு வாடகைக்கு அமர்த்திய சிலர் இடைநடுவில் சாரதியைக் குத்திக் கொலை செய்து சடலத்தை அத்தனகல ஆற்றில் எறிந்துள்ளனர். பின்னர் வான் பொலன்னறுவைக்கு கொண்டு செல்லப்பட்டது.

வானில் இரத்தக்கறை இருந்ததைக் கண்ட சிலர் பொலீஸாருக்கு அறிவித்ததை அடுத்தே வான் கைப்பற்றப்பட்டது.

தென் பகுதியில் இருந்து வான்களைக் கடத்தி இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்பவர்களே இக் கொலையையும் செய்திருக்கிறார்கள் என்பது பொலீஸ் விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த மேலும் இருவரை பொலீஸார் தேடி வருகின்றனர். அவர்களில் ஒருவர் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர் எனத் தெரியவந்துள்ளது. (ம)

### 'சிறுவரை கையாளுதல்' பயிற்சிப் பட்டறை

'சிறுவர்களைக் கையாளுதல்' என்ற தலைப்பில் சிறுவர் இல்ல உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுப் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறும்.

மாவட்ட சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்பனவற்றின் அனுசரணையுடன் நடைபெறும் இப் பயிற்சிப் பட்டறையில், சிறுவர்களின் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் பற்றி ஆராயப்படவிருக்கின்றன.

இதில் யாழ் மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களைக் கலந்து கொள்ளுமாறு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினர் கேட்டுள்ளனர். (ம-5)

# அன்றைய யாழ்.பொலீஸாரிடம் தமிழில் பேசினால் தொல்லை!

**யாழ்.பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது சிங்கள மாணவர்களும் அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறு அனுமதி பெற்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்தான் ஜுட் பெரேரா. இவர், தற்போது ஆஸ்திரேலியாவில் விக்ரோறியா மாநில நிர்வாகசபை உறுப்பினராக உள்ளார். தனது அன்றைய யாழ்ப்பாண அனுபவங்கள் மற்றும் இன்றைய அரசியல் நிலைவரங்கள் குறித்து அவர் 'சிலுமின' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

*கேள்வி:* வடபகுதியில் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலகட்டத்தில் நீங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இணைந்தீர்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இப்புதிய அரசியல் நடவடிக்கைகள் அப்போது பரவியிருந்ததா?

*பதில்:* ஆம். ஆயுத நடவடிக்கைகள் மூலம் தனியான இராச்சியமொன்றினை உருவாக்கவேண்டுமென்ற கருத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினுள்ளும் அதற்கு வெளியிலும் இளைஞர்கள் மத்தியில் தோன்றியிருந்தது. வடக்கு - கிழக்கு எழுச்சி தொடர்பாக அதற்கு முன்னரே கருத்து வெளிப்பாடுகள் வெளியிடப்பட்டிருந்தன. 1956இல் சிங்களம் மட்டுமே அரச கருமமொழியாக்கப்பட்ட போது எதிர்வரும் சில ஆண்டுகளுள் தமிழ் மக்களிடையே பெரிய அளவில் எழுச்சி உருவாகுமென ல.ச.ச.கட்சியைச் சேர்ந்த கொல்வின் ஆர்டீசில்வா தெரிவித்தார். அவ்வேளையில், சிங்கள அரசுகளால் தமிழ்மக்களுக்கு அநியாயம் இழைக்கப்படுவதான கருத்து தமிழ்மக்கள் மத்தியில் நிலவியது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றவேளையில், எமக்கும் இது தொடர்பான அனுபவங்கள் ஏற்பட்டன. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சிங்களப் பொலீஸாரே கடமையாற்றினர். அவ்வேளையில், தமிழ் இளைஞர்கள் சைக்கிளில் 'டபிள்' செல்லும் சந்தர்ப்பங்களில் சிங்களப் பொலீஸாரினால் சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆனால், சிங்களவர்களாகிய நாம் அவ்விதம் சைக்கிளில் 'டபிள்' செல்ல நேரும்போது சிங்களப் பொலீஸார் எவ்வித சிரமமும் அளிப்பதில்லை. நாம் சிங்களத்தில் உரையாடினால் பொலீஸார் எம்மைச் சிரமப் படுத்துவதில்லை. அதேவேளை, அவ்வித பயணத்தில் தமிழ் இளைஞர்கள் ஈடுபடும்வேளை பொலீஸாரிடம் சிக்கினால் பலவித துன்புறுத்தல்களுக்கு உள்ளாக நேர்ந்தது. அரச சேவைக் கடிதங்கள் யாவும் சிங்கள மொழியிலேயே தமிழ்மக்களுக்கு அனுப்பப்பட்டன. சிங்களமொழி தெரியாத தமிழ் மாணவர்கள் அக்கடிதங்களை எங்களிடம் எடுத்து வருவார்கள்.

கடிதத்தில் என்ன எழுதப்பட்டுள்ளதெனத் தெரிந்துகொள்ளவே அவ்விதம் எம்மை அணுகினர். அந்தவித நிலைமையே அன்று வட பகுதியில் காணப்பட்டது. இச்சமயம் எனக்கொரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. நாம் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்டவேளையில், கலைப்பீட மாணவர் சங்கத் தேர்தல் இடம்பெற்றது. நானும் அதில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். அவ்வேளை, எம்முடன் போட்டியிட்டுத் தோல்வியுற்ற குழுவினர் எமது தரப்பினரைத் திரைப் படமொன்றிற்கு அழைத்துச் சென்றனர். நாம் பஸ்ஸொன்றில் ஏறிக் கும்மாளமிட்டவாறே சென்றவேளையில், வழியில் பொலீஸார் பஸ்ஸை நிறுத்தினர். பஸ்ஸின் முன்புறத்தில் நின்ற தமிழ் மாணவர்கள் பின்புறமாக வந்து "நீங்கள் சென்று பொலீஸாருடன் பேசுங்கள்" என எம்மைக் கேட்டுக்கொண்டனர். சிங்கள மாணவர்களாகிய நாம் சிங்களப் பொலீஸாருடன் சிங்களத்தில் உரையாடினால் பிரச்சினை தீர்ந்துவிடுமென அவ்வேளையில் தமிழ்மாணவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். அவ்விதமான நிகழ்வுகளே அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தன. அவ்வாறான அனுபவங்களை அவ்வேளையில் தமிழ்மக்கள் எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

இவ்வகை நிலைமையே அக்காலகட்டத்தில் தமக்கென தனியான அரசொன்று அவசியமென்ற எண்ணம் தமிழ்மக்களிடம் உருவாகவும், தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளல் அவசியமென்ற கருத்துத் தோன்றவும் காரணமாயிற்று.

*கேள்வி:-* நீங்கள் 1977இல் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவேளை நாட்டின் அரசியல் வரலாற்றில் முக்கிய திருப்பங்கள் இடம்பெற்றன. 1977இற்குப் பின்னர் உங்களது அரசியல் நடவடிக்கைகள் எவ்வகையில் அமைந்தன?

*பதில்:-* 1977இல் யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் நான், ல.ச.ச.கட்சியின் உத்தியோகபூர்வ உறுப்புரிமை பெற்று கட்சியின் நடவடிக்கைகளில் என்னை இணைத்துக் கொண்டேன். 1984இல் விஜயகுமாரதுங்கவைச் சந்திக்க நேர்ந்தது. மின்னேரிய இடைத்தேர்தல் சமயத்தில் நாம் மின்னேரியவில் சந்தித்தோம். அவ்வேளையில், நான் மின்னேரிய இடைத் தேர்தலில் எமது கட்சியின் சார்பாக விஜயகுமாரதுங்கவுக்கு பிரசாரம் செய்வதற்காக மின்னேரியவுக்குச் சென்றிருந்தேன். அச்சமயம் என்னை இனம் கண்டுகொண்ட அவர், தனது ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இணையுமாறு வேண்டிக்கொண்டார்.

*கேள்வி:-* ஸ்ரீல.மக்கள் கட்சியின் கட்டான தொகுதி அமைப்பாளராகப் பதவி வகித்த வேளையில் திடீரென நீங்கள் வெளிநாட்டுக்குச் சென்று விட்டீர்கள். நீங்கள் அவ்விதம் முடிவுசெய்ததற்கான காரணமென்ன? வெளிநாட்டில் இருந்தவாறே அரசியலில் ஈடுபடும் எதிர்பார்ப்பு தங்களிடம் இருந்ததா?

*பதில்:-* நான் அப்போது ஒரு கணனி இயக்குநராக சீ.டபிள்யூ.மகீஸ் நிறுவனத்தில் தொழில்புரிந்து வந்தேன். கட்டான தொகுதி அமைப்பாளராக கடமையாற்றி வந்தவேளையில், அப்பதவியிலிருந்துகொண்டு முன்னேறுவது சிரமமானதென நான் புரிந்துகொண்டேன் எமது குடும்பப் பின்னணியைப் பொறுத்தவரை நாம பணம் படைத்தவர்களல்லர். எமது நாட்டில் அரசியலில் ஈடுபடுவதாயின் கோடிக் கணக்கான பணம் அவசியமென்பதை உங்களுக்கு புதிதாக நான் சொல்ல வேண்டியதில்லையல்லவா? நான் ஓரளவு பணம் சம்பாதித்துக் கொண்டு வந்து அரசியலில் ஈடுபடலாம் என்ற எண்ணத்திலேயே வெளிநாடு செல்லத் தீர்மானித்தேன். நான் முதலில் தாய்லாந்துக்குச் சென்றேன். 1988 செப்ரெம்பர் மாதமளவிலேயே ஆஸ்திரேலியாவுக்குச் சென்றேன். நான் ஆஸ்திரேலியாவில் ஒரு நல்ல நிலைமைக்கு வந்ததன் பின்னரே அதாவது 1990 - 97 கால பகுதியிலேயே ஆஸ்திரேலிய அரசியலின்மீது கவனஞ்செலுத்தினேன். அவ்வேளையில், ஆஸ்திரேலியாவில் பதவியிலிருந்த இடதுசாரிப் போக்குடைய, விக்ரோறிய தொழிற் கட்சி தவறான பாதையில் தீர்மானங்களை மேற்கொண்டு இயங்கியது. அதனால் வலதுசாரி லிபரல் கட்சிக்கு ஆதரவு பெருகிய கால கட்டம் அது. தொழிற் கட்சியின் தலைவர் ஜேவ கெனத் மாக்கிரட்தட்சரைப் போன்று தொழிற் சங்கங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதகமாக இயங்கினார். அவர் சகல தவறுகளையும் தொழிற் சங்கங்கள் மற்றும் தொழிலாளர்கள்மீது சுமத்தும் நபராவார். அவரது நடவடிக்கைகளுக்கு சவால்விட வேண்டிய தேவை இடதுசாரிக் கருத்துக்களைக் கொண்ட எனக்கு ஏற்பட்டது. இப்பின்னணியிலேயே நான் விக்ரோறியா மாநில தொழிற்கட்சியில் இணைந்துகொண்டேன்.

எமது பகுதியில் தொழிற்கட்சிக்காக வேலை செய்ய விரும்புகிறீரா என என்னைக் கேட்டார்கள். நான் அச்சவாலை ஏற்றுக்கொண்டேன். ஆஸ்திரேலியாவின் மேல் சபையானது 4 கீழ்சபை ஆசனங்களைக் கொண்டதாகும். எனக்கு 'சவுத் ஈஸ்ட்' என்ற தொகுதி ஒதுக்கப்பட்டது. அதன் பிரகாரம் அத்தொகுதியில் அடங்கிய நான்கு கீழ்மட்ட மந்திரி சபைத் தொகுதிகளில் நான் கட்சிக்காக ஆதரவு தேடவேண்டி ஏற்பட்டது. 1999இல் 'கிராம்பர்க்' என்ற தொகுதியில் நான் போட்டியிட்டேன்.

2002ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் நாடு முழுவதிலும் தொழிற் கட்சிக்குப் பெரும் ஆதரவலை இருந்தது. நான் 'கிறாம்பேர்க்' தொகுதியில் வெற்றிபெற வேண்டுமாயின் நூற்றுக்கு பத்து சதவீத வாக்குகள் பெற்றால் போதுமென இருந்த நிலையில், நான் 60.84 வீத வாக்குகள் பெற்று வெற்றியடைந்தேன்.

*கேள்வி:-* இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறைத் தீர்வு பற்றி அண்மைய நாள்களில் பேசப்படுகிறது. நீங்கள் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் சம்பந்தப்பட்டுள்ள ஆஸ்திரேலிய நாட்டுச் சமஷ்டிமுறை அனுபவங்களை விவரித்தால் ...?


*பதில்:-* ஆஸ்திரேலியா பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடு. அவ்வேளையில் அங்கு பிராந்தியரீதியிலான அரசுகள் அமைந்திருந்தன. விக்ரோரியா, குவீன்லாந்து ஆகிய பிராந்தியங்கள் பிரிட்டிஷ் அரசுக்குட்பட்ட தனித்தனியான 'கொலனி'களாக இயங்கின. 1901ஆம் ஆண்டில் இப்பிராந்தியங்கள் யாவும் ஒன்றிணைந்து சமஷ்டி முறையிலான அரசொன்று உருவாக்கப்பட்டது. அதுவே ஆஸ்திரேலிய சமஷ்டி அரசாகும்.

நான் அங்கத்துவம் வகிக்கும் விக்ரோரியா மாநில அரசுக்கு சுகாதாரம், போக்குவரத்து, பிரதேச மற்றும் பிராந்திய கல்வி, அடிப்படை வசதிகள் மற்றும் நீதித்துறை உட்பட்ட அதிகாரங்கள் உள்ளன. நாட்டின் தேசிய விவகாரங்கள் தொடர்பான அதிகாரங்கள் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால், பிராந்திய அரசைக் கலைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்குக் கிடையாது. பிராந்திய அரசுகள்மீதான மத்திய அரசின் அதிகாரம் மிகச் சிறிய அளவானதே. ஒவ்வொரு பிராந்திய அரசுகளும் தத்தமது பொருளாதாரம், தனித்துவம் மற்றும் நிதி ஆகிய விடயங்களைத் தாமே கையாள வகை செய்யப்பட்டுள்ளது. தென் ஆஸ்திரேலியப் பிராந்தியம் நிலப்பரப்பில் பெரிய அளவினைக் கொண்ட பிராந்தியமாகும். விக்ரோரியா பிராந்தியம் கைத்தொழில் முயற்சிகள் நிறைந்த பிராந்தியமாகும். ஒவ்வொரு பிராந்தியமும் தத்தமது வளங்களின்மூலம் சுயமாகச் செயற்படுகின்றன.

இச்சமஷ்டி அமைப்பு முறையின கீழ் ஆஸ்திரேலியாவில் பல இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்முறையின்கீழ் சகல இன மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றன. ஆஸ் திரேலியா பரப்பளவில் பெரிய நாடு என்பதால் இச்சமஷ்டி முறை பேணப்படுதல் சாத்தியப்படுமா எனப் பலர் எண்ணக்கூடும். ஆனால், ஸ்ரீலங்காவின் சனத் தொகைக்குச் சமமான சனத் தொகையே ஆஸ்திரேலியாவில் உள்ளது. ஆதலால், ஆஸ்திரேலியாவின சமஷ்டிமுறை ஸ்ரீலங்காவுக்கு மிகப் பொருத்தமானதென்பது எனது நம்பிக்கை. ஸ்ரீலங்காவில் அதிகாரங்கள் சம அளவில் பகிரப்படவேண்டும். தற்போது நடைமுறையிலுள்ள மாகாண சபை முறையின்கீழ் அதிகாரங்கள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதே நான் புரிந்துகொண்ட உண்மையாகும். ஆஸ்திரேலியாவின் சமஷ்டி முறை இங்கு நடைமுறைப் படுத்தப்பட்டால் அது ஸ்ரீலங்காவின் மக்களிடையே அந்நியோன்யத்தை வளர்க்கு மென்பது எனது நம்பிக்கை.

*கேள்வி:* இருபது ஆண்டுகளுககு மேல் இந்நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப்போர் நிறுத்தப்பட்டு இப்போது ஓராண்டு காலம் இருதரப்புக்குமிடையே யுத்தநிறுத்தம் தொடர்கிறது. இன்னொருபுறம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான பேச்சுக்களில் இரு தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். ஸ்ரீலங்காவின் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தொடர்பான தங்கள் மதிப்பீடு யாது?

*பதில்:-* இந்த இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று அவசியமாகும். இதற்கு யுத்த ரீதியான தீர்வுகாண முடியாது. தமிழ்மக்கள் சிறுபான்மையினர் என்றவகையில், ஸ்ரீலங்காவின் வரலாற்றில் பல்வேறு அநீதிகளுக்கு உட்பட்டுள்ளனர். அந்த அநீதிகள் நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். நான அன்று ல.ச.ச.கட்சியிலும், ஸ்ரீல. மக்கள் கட்சியிலும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில், இனப்பிரச்சினையை நோக்கிய கோணத்திலேயே இன்றும் அதனை நோக்குகிறேன்.



கடந்த ஒரு வருடகாலமாக இடம்பெற்ற சமாதான நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யும்போது, அந்நடவடிக்கைகள் சரியான முறையிலேயே முன்னெடுத்துச் செல்லப்படுவதாகக் கூற இயலும். அது சரியான பாதையிலேயே பயணம் மேற்கொள்கிறது. இன்று நாட்டின் எதிரணியினரும் இவ்விடயத்தில் ஒத்துழைத்து சமாதான முயற்சிகள் வெற்றிபெற உழைக்க வேண்டும். கடந்த இருபதாண்டு கால யுத்தத்தால் பொதுமக்கள் களைப்படைந்துள்ளனர். இந்நாட்டு மக்கள் யுத்தத்தில் ஈடுபட எவ்வித தேவையும் இல்லை. இந்நாட்டின் இரு முக்கிய கட்சிகளில் ஒன்று இனப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கும் வேளையில், அத்தீர்வு முயற்சிக்கு எதிராக இனவாதத்தைக் கிளப்பி அடுத்த தடவை அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் மறுதரப்பு ஈடுபட்டு வந்த நிகழ்வுகளே நமது நாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளன. ஆனால், இப்போது அச்சூழ்நிலை அற்றுப்போய்விட்டது. ஏனெனில், இன்று நாட்டு மக்கள் சமாதானத்தையே எதிர்பார்க்கின்றனர்.

அன்று 1956இல் சிங்களம் மட்டும் அரச கருமமொழிச் சட்டத்திற்கு எதிராக ல.ச.ச.கட்சி அங்கத்தவர்கள் நாடாளுமன்றத்துள் நுழைய முயன்றதை பிலிப் குணவர்த்தனவாலும் டபிள்யூ.தகநாயக்கவினாலும் தடுக்க முடிந்தது. இன்று ஜே.வி.பி. உட்பட இனவாதிகளால் அவ்விதம் செய்ய இயலாது. அந்த யுகம் அற்றுப்போய் விட்டது. இனவாதிகளுக்கு அவ்விதமான சக்தி இன்றில்லை. அவர்களால் இன்று பொதுமக்களைத் திசை திருப்பவியலாது.

*கேள்வி:-* ஆஸ்திரேலியாவில் சிங்கள மக்களைப் போன்று ஈழத்தமிழ் மக்களும் அதிகளவில் வசிக்கின்றனர் என்பது இரகசியமல்ல. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் இடம்பெறும் சமாதானப் பேச்சு தொடர்பாக அவர்களது உணர்வு எவ்விதம் அமைந்துள்ளது?

*பதில்:-* வெளிநாடுகளில் வசிக்கும் சிங்கள மக்களைப் போன்றே தமிழ்மக்களும் தமது தனித்துவத்தைப் பேணுவதில் மிகுந்த உற்சாகம் காட்டுகின்றனர். ஆஸ்திரேலியாவில் வசிக்கும் தமிழ்மக்களில் பெரும்பாலானோர் ஈழ இராட்சியத்துக்குக் குறைந்த எவ்வகைத் தீர்வையும் ஏற்க விரும்பவில்லை. அதேசமயம், சிங்கள மக்களில் பெரும்பாலானோர் தமிழ்மக்களுக்கு எந்தவித அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்படுவதையும் விரும்பவில்லை.

அவர்கள் இவ்வித மனநிலை கொண்டிருப்பதற்கு அவர்களது தனித்துவத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் விருப்பே காரணமாகும். ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழ்மக்கள் நிதி சேகரித்து விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அனுப்பிவைப்பதுடன் தமது கைகளைக் கழுவிக்கொள்ள முடியும். விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து அரச படைகளுடன் போரிட ஆஸ்திரேலியா வாழ் தமிழ் மக்களுக்கு அவசியமில்லை. அரச படைகளின் தொல்லைகளுக்கு உள்ளாகும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடையாது. அவர்களால் ஆஸ்திரேலியாவிலேயே வசதியுடன் வாழ இயலும். அங்கு வாழும் சிங்கள மக்களின் நிலைப்பாடும் அதுபோன்றதே. அவர்களால் ஆஸ்திரேலியாவில் மிகுந்த வசதியுடன் வாழ இயலும். ★

தமிழில்: வீசியெஸ்ரீ

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

## வீதி நிலைமை மோசம்

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்திற்கு முன்னால் உள்ள பிரதான வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு சேதம் அடைந்து காணப்படுகின்றது.

மூளாய் - சங்கானை இடையேயான பிரதான போக்குவரத்துக்கு அதிகளவில் பயன்படுத்தப்படும் இந்தப் பிரதான வீதி கடந்த ஒருவருட காலமாக இவ்வாறு காணப்படுகின்றது. இந்த வீதியைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது. (ஒ-86-29)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 07 - 1927



உதிர்வு 29 - 02 - 2000

**அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பு**

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

திதி: 25.02.2003

ஆண்டுகள் மூன்று ஆனதே
ஆறவில்லை எம்சோகம்!
உங்கள் பாசம் நிழலாடும் வரை
ஆறாது எம் சோகம்!

*தம்பகாமம், பளை.*

(14780)

- குடும்பத்தினர்.

உதயன்

# குச்சவெளிச்சம்பவம் உணர்த்தும் பாடம்

திருகோணமலை மாவட்டம் குச்சவெளியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும் இடையில் நேற்று இடம்பெறவிருந்த பெரும் மோதல் தவிர்க்கப்பட்டிருக்கின்றது.

இருதரப்பினரும் மாறி மாறிச் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருக்கின்றார்கள். எக்கணமும் பெரும் மோதல் வெடிக்கக்கூடிய ஆபத்துநிலை நீண்டபலமணி நேரம் நீடித்திருக்கின்றது. என்றாலும் தெய்வாதீனமாக ஒரு வேட்டுக்கூடத் தீர்க்கப்படாமல் நிலைமை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றது.

கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து பலமணி நேரம் இரு தரப்பினருக்கும் இடையே ஓடித்திரிந்து, பதற்றத்தைத் தணித்து, சுமுக நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றனர். அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது.

குச்சவெளியில் ஏற்பட்ட நெருக்கடி குறித்து வழமைப் பிரகாரம் சம்பந்தப்பட்ட இருதரப்பினரிடமிருந்தும் ஒன்றுக்கொன்று மாறான தகவல்கள் ஊடகங்களுக்குக் கசிந்திருக்கின்றன.

இச்சம்பவம் குறித்து இரு தரப்பினரும் உத்தியோகபூர்வமாகத் தகவல்களை வெளிப்படுத்திய பின்பு, கண்காணிப்புக்குழுவின் உத்தியோகபூர்வத் தகவல்களையும் பரிசீலித்தே இச்சம்பவம் குறித்து பொதுமக்கள் ஏதேனும் ஒரு முடிவுக்கு வரமுடியும்.

ஆனால், மோதல் ஏற்படாமல் இத்தகைய நெருக்கடியைத் தீர்ப்பதில் இருதரப்பினரும் காட்டியுள்ள ஆர்வம் வரவேற்கத்தக்கது.

யுத்தத்தையும் மோதல்களையும் தவிர்த்து - அமைதி வழியில் - சமாதான முறையில் - இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இருதரப்புத் தலைமைகளுக்கும் உள்ள வேணவாவை இத்தகைய நெருக்கடி மற்றும் மோசமான பதற்ற நிலைமைகளுக்கு மத்தியிலும் அவர்கள் கடைப்பிடித்த பொறுமை மற்றும் பொறுப்புணர்வோடு கூடிய செயற்பாடு என்பன எடுத்துக்காட்டியுள்ளன.

பெரும் யுத்தமே வெடிக்கக்கூடிய ஆத்திரமூட்டல் மற்றும் பதற்ற நிலைமைகளுக்கு மத்தியில் குச்சவெளியில் பேணப்பட்ட பொறுப்புணர்வுடன் கூடிய செயற்பாடு, முன்னரும் பல சந்தர்ப்பங்களில் காட்டப்பட்டிருக்குமானால் இடம்பெற்ற வருந்தத்தக்க பல சம்பவங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். நெடுந்தீவு, மானிப்பாய் போன்ற இடங்களில் ஏற்பட்ட கசப்பான - துயரமான - நிகழ்வுகளை நிச்சயமாகத் தவிர்த்திருக்க முடியும்.

சமாதான வேளையில் ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு அமைதி பேணுவது வேறு. போர்ச் சமயத்தில் ஆயுத முழக்கங்களோடு, யுத்தத்திற்கு ஆயத்தமாக இருந்துகொண்டு வீரப்போர் புரிவது வேறு.

ஆனால், அமைதி வேளையிலும் - அடுத்த கணம் யுத்தத்துக்கும் தயாரான நிலையில் - எந்நேரமும் குண்டுகளைப் பொழிந்து தள்ளக்கூடிய கனரக ஆயுதங்களின் இயக்குவிசையில் கையை வைத்துக்கொண்டு - நீடிக்கும் மயான அமைதியைத் தொடர்ந்துபேண முயற்சிப்பது முதல் இரண்டிலும் முற்றிலும் வேறானது. நடைமுறையில் குழப்பமின்றிக் கடைப்பிடிப்பதற்கு கஷ்டமானது; சாத்தியமற்றது.

ஆனாலும், அத்தகைய நெருக்கடியிலும் அமைதி பேணப்பட்டிருக்கின்றது; நிதானம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது.

மீண்டும் யுத்தம் ஏற்படுவதை வழிமேல் விழி வைத்துப் பார்த்திருக்கும் தீயசக்திகள், குச்சவெளியில் கடைப்பிடிக்கப்பட்ட நிதானத்தை வேறு படம் போட்டு விமர்சிக்கும் என்பது மட்டும் நிச்சயம். அத்தகைய தீய சக்திகளின் பிரசாரங்களுக்கு எடுபடாமல் அமைதி பேணுவதில் இருதரப்பும் தொடர்ந்தும் ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும்.

இந்தப் பின்னணியில் மீண்டும் ஒரு தடவை ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுவது அவசியமாகின்றது.

தீவுப்பகுதி உட்பட பல இடங்களிலும் -

கடலில் மட்டுமல்லாமல் தரையிலும் கூட - பல தடவைகள் புலிகளுக்கு எதிரான மோதல் நிலைமை கடற்படையுடன்தான் அடிக்கடி ஏற்படுகின்றது. கடற்படை குறித்து அரசுத் தலைமை தீர்க்கமான முடிவுகளை எடுத்துச் செயற்படுத்துவது, அமைதி முயற்சிகளின் ஆக்கபூர்வமான போக்குக்கு நல்லது.

# யூனியன் கல்லூரி ஒன்றுகூடலுக்கு அனுமதி பெறுவதில் குழப்பம்!

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு, படையினரின அனுமதியில் ஏற்பட்ட குழப்பங்களால் திட்டமிட்ட வகையில் நடைபெறமுடியாதிருந்ததாகக் கூறப்படுகிறது.

மேற்படி ஒன்றுகூடலுக்கான அனுமதியை பாடசாலையின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினர் ஏற்கனவே படைத்தரப்பிடம் பெற்ற பின்னர் ஒன்றுகூடலுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டனர்.

ஆனால், கடந்த வெள்ளிக்கிழமை காலை பலாலி இராணுவ முகாமினால் மேற்படி அனுமதி மறுக்கப்பட்டதாகவும் -

இதனால், மாணவர் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர் ஒன்றியத்தினர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ந.ரவிராஜின் உதவியுடன் இராணுவ தலைமை அதிகாரியிடம் சென்று அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னரே நிகழ்வை நடத்தினர்.

செல்வன்.இ.பிறேமிலன் தலைமையில் நடைபெற்ற இவ்வொன்றுகூடல் நிகழ்ச்சியில் யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்தியரும், யூனியன்கல்லூரி பழைய மாணவனுமாகிய கலாநிதி கருணாகரன் பங்கேற்றார். (ஒ-152)

# திருவீதி மான்மியம்



சங்கரன் தன் பாட்டியந்த
சரசாச்சி தன்னை ஏற்றி
இங்கிதமாய் 'கொண்டா' தன்னில்
இணுவையூர் கோயில் சென்றான்
அங்கந்த தெருக் குழியதனில்
அவன் வந்த 'கொண்டா' வீழ
சங்கரன் பாட்டி சாய்ந்து வீழ
செங்குருதியோடி சிவந்தது இணுவையூரும்
ஐங்கரன் அடியாள் பாட்டி
அடைந்தனள் கயிலை அன்றே
இங்கிந்த கொடுமை எல்லாம்
இத்தெரு நிலையாலன்றோ?

\- விகடகவி.

# நிரந்தர சமாதானம் மலர அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்!

## இந்து கலாசார அமைச்சர் அழைப்பு

சண்டிலிப்பாய்,பெப்.25

நிரந்தர சமாதானம் மலர அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

\- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. கல்லூரி அதிபர் நா.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

அமைச்சர் மகேஸ்வரன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளது.

இந்தவேளையில், தமிழ்மக்கள் இதுவரை காலமும் அனுபவித்துவந்த கொடுமைகள் - அடக்குமுறைகள் இனிமேலும் தொடராது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதிபடக் கூறியுள்ளார்.

இந்நாட்டில் இந்து மதத்தையும் இந்து கலாசாரத்தையும் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உள்ளது. இந்து சமய மக்களை மதம்மாற்றுவதற்குத் திட்டமிட்ட முறையில் சில வேற்று சமயக் குழுக்களும் நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன.

எமது பிரதேசத்தில் மக்கள் திட்டமிட்ட ரீதியில் மதம் மாற்றப்படுவது தடுத்து நிறுத்தப்படவேண்டும். விரைவில் நாடாளுமன்றத்தில் மதமாற்ற தடுப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறேன். இதற்கு பௌத்த மதத்தைச் சேர்ந்த நிறுவனங்களும் ஆதரவு வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

எமது பிரதேசத்தின் இந்து மத நிறுவனங்களின் செயற்பாடுகள் மேலும் ஊக்குவிக்கப்படவேண்டும். இந்து சமயக் கல்வியையும் ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறேன்.

அறநெறிப் பாடசாலைகளை சகல இந்து ஆலயப் பகுதிகளிலும் ஆரம்பிப்பதற்கும், அவற்றின்மூலம் இளம் சந்ததியினர் சமய அறிவையும், பக்தி நெறியையும் பெறுவதற்கும் எமது அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

ஒவ்வொரு அறநெறிப் பாடசாலைக்கும் வருடாந்தம் 50 ஆயிரம் ரூபா உதவி நன்கொடைப் பணம் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

கடந்த யுத்த கால அனர்த்தங்களின்போது தரைமட்டமாக்கப்பட்ட இக்கல்லூரியை புனரமைப்புச் செய்வதற்கான உதவிகளைச் செய்து தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுவேன். கணனிக் கல்வியை இங்கு ஊக்குவிப்பதற்குத் தேவையான வளங்களையும், கணனி அறையையும் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றேன்.

இக்கல்லூரியின் வளங்களை அதிகரித்து சிறந்த கல்விச் சேவையை வழங்குவதற்கு எம்மாலான உதவிகளையும் ஆதரவையும் வழங்குவேன் - என்றார்.

முன்னாள் அதிபர் என்.நாகராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். (எ-135)

# சர்வதேச ரீதியில் புகழ் பெற விளையாட்டுத்துறை வழிகாட்டும்

## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

செம்பியன்பற்று,பெப்.25

கல்வியுடன் விளையாட்டுத்துறையிலும்சாதனை புரிவோர் வாழ்க்கையில் வெற்றி பெறுவர். விளையாட்டுத் துறையில் முன்னணியில் திகழ்வோர் சர்வதேச ரீதியில் புகழ் பெறுவர்.

\- இவ்வாறு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் தொடர்ந்து உரையாற்றிய மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

விளையாட்டுத்துறை ஒரு மனிதனை பூரண மனிதனாக்கும். கல்வியில் காட்டும் ஆர்வத்தை விளையாட்டுத் துறையிலும் மாணவர்கள் காட்டவேண்டும். உலக வரலாற்றை ஒருமுறை மீட்டுப் பார்த்தால் சர்வதேச ரீதியில் முன்னணி வகித்த பலர் கல்வியுடன், விளையாட்டுத் துறையில் துறைபோனவர்களாகவே காணப்படுகின்றனர்.

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்கள் பலர் மாகாண-தேசிய மட்டப் போட்டிகளில் பங்குகொண்டு பல்வேறு சாதனைகளை கடந்த காலங்களில் நிலைநாட்டியுள்ளனர். இவ்வாறு விளையாட்டுத்துறை குடாநாட்டில் அதிகூடிய வளர்ச்சியைப் பெறுவதற்கு கல்விச் சமூகத்தினர் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

மேற்படி கல்லூரி பல்வேறு துறைகளிலும் வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுள்ளது. இது பாராட்டப்பட வேண்டியது. பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் இந்தக் கல்லூரி சாதனை படைத்து வருவதை நான் அறிவேன். இது போன்ற நிலை இந்தக் கல்லூரியை மேன்மேலும் தரம் உயர்த்தும்.

ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஒத்துழைப்புக்களை வழங்கி மேலும் இந்தக் கல்லூரி மாணவிகளின் கல்வி அபிவிருத்திக்கும் பாடசாலை வளர்ச்சிக்கும் உதவ வேண்டும் - என்றார். (எ-36)

## நாளை

மாசி 14
புதன்கிழமை
(26.02.2003)
திதி : தசமி
முற்பகல் 9.53வரை.
நட்சத்திரம்: மூலம்
முற்பகல் 9.59வரை.
சுபநேரம்: 4.59- 6.29
ராகுகாலம் : 12.29 - 1.59
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

குறைவாய் உண்பதும் குறைவாய்ப் பேசுவதும் ஒருவனுக்கு ஒரு தீங்கும் புரியா.

# நம்பிக்கை நிதியத்தில் இணைந்து நன்மைகள் பல பெறுங்கள்!

## ஓய்வூதியர்களுக்கு அழைப்பு

வலி.தெற்கு,பெப்.25

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் இணைந்து கொள்வதன்மூலம் ஓய்வூதியர்கள் தமது ஓய்வுக்காலத்தில் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

வலிகாமம் தெற்கு அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அதன் தலைவர் சே.இராசவல்லவன் மேற்கண்டவாறு கூறினார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வலிகாமம் தெற்கு பிரிவைச் சேர்ந்த அரச சேவை ஓய்வூதியர்கள் கலந்துகொண்டனர்.

ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் இணைந்து கொள்வதன் மூலம் ஓய்வூதியர்கள் பெறக்கூடிய நன்மைகள் பலவற்றை இராசவல்லவன் அங்கு எடுத்துக்கூறினார்.

நம்பிக்கை நிதியத்தில் அங்கத்தவராகிய இரண்டு வருடங்களின் பின்னர் நிதியத்தில் இருந்து 10 ஆயிரம் ரூபாவை அங்கத்தவர் கடனாக பெற்றுக்கொள்ளமுடியும்.

அங்கத்தவர் இறந்த பின்னர், அவர் செலுத்திய பணத்தின் பத்துமடங்கு தொகையை அவர் நியமிக்கும் பின்னுரித்தாளர் பெற்றுக்கொள்ளமுடியும். மற்றும் ஓய்வூதியர்களுக்கு சுகாதார நல உதவிகள் பலவும் வழங்கப்படும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர்வாகிகளாக கடந்த வருடம் இயங்கிய செயற்குழுவினரே தொடர்ந்தும் செயற்படவேண்டும் என ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.

இதன் தலைவராக சே.இராசவல்லவனும், செயலாளராக திருமதி சரோஜினிதேவி கல்யாணசுந்தரேசனும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-152)

# சிரமதானம் மூலம் வீதி புனரமைப்பு

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான கடற்கரை வீதியைச் சிரமதானம் மூலம் செப்பனிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விளக்க வகுப்பு அடுத்த மாதம் 4ஆம் திகதி வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நடைபெறவுள்ளது. அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களின் உறுப்பினர்கள் இந்த விளக்க வகுப்பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சிரமதான ஆரம்ப நிகழ்வில் மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை மற்றும் அப்பகுதி கிராமசேவக அலுவலர்கள் 'நிக்கொட்' நிறுவன அதிகாரிகள், உலக உணவு ஸ்தாபன அதிகாரிகள், உலக வங்கி அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

(எ-36)


## மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 02 - 11 - 1988



உதிர்வு 25 - 02 - 2000

செல்வன் தர்மசேகரம் முகுந்தன்

(உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மாணவன்)

ஆண்டுகள் மூன்றும் ஆனதோ அந்தோ நீர் எமைப் பிரிந்து?

ஈண்டு உம்மை நினைந்து நாம் வாடுகின்றோம் இங்கே!

தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம்,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(14879)

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா,
தம்பி மற்றும் குடும்பத்தினர்.


## மருத்துவமனைக்கு காணி கொள்வனவு

ஏழாலை,பெப்.25

புத்தூர் அரசினர் வைத்திய சாலைக்கு பொதுமக்கள் வழங்கிய நிதி மூலம் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக மருத்துவமனை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

இக்காணிக்கான உறுதி விரைவில் யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

## இனங்காணாத காய்ச்சலினால் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம்,பெப்.25

5 நாள்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதாகக் கூறி யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் அங்கு மரணமானார்.

தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும் குணமடையாததால் இந்த நபர் கடந்த 12ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 9 நாள்களின் பின் கடந்த 20ஆம் திகதி அவர் அங்கு மரணமானார். அல்வாயைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை ஹென்லி (வயது 32) என்பவரே மரணமானவராவார்.

இரத்த வாந்தியுடன் நினைவிழந்த நிலையில் இருந்த இந்நோயாளிக்கு வேண்டிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் இக்காய்ச்சலுக்கான காரணத்தை இனங்காண முடியவில்லை என ஆஸ்பத்திரி வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது.

(ஒ-15)

# 'அழகிய முதுமை' அமைப்பின் புனரமைப்புக் கூட்டம்

வலிகாமம் தெற்கு, பெப்.25

ஓய்வூதியர்கள் மட்டுமல்லாது முதுமையடைந்தவர்களும் அங்கம் வகிக்கக்கூடியதான 'அழகிய முதுமை' என்ற அமைப்பின் யாழ்ப்பாணக் கிளையின புனரமைப்புக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ். செயலக மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக்கிளைச் சங்கம் தொடர்ந்து செயலாற்ற இவ்வருடத்துக்கான நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கும், புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கும், சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் என இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பாக முடிவு செய்யப்பட்டது (எ-152)


## ROYAL GLASS LANKA (PVT) LTD.

கட்டடக் கலையின் அதி நவீன நாகரீகத்தை தற்போது உங்களுக்கும் அறிமுகம் செய்கின்றோம்

Royal Glass Lanka Ltd. வழங்கும்

GLASS BLOCKS - கண்ணாடிக் கல்

(விரும்பிய எண்ணங்களிலும் வண்ணங்களிலும்)

பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் அணுகுங்கள்

யாழ் நகரில்-

- ★ விமாகி செரமிக்ஸ்
- ★ நியூ கமல் செரமிக்ஸ்
- ★ விண்மீன் அங்காடி (நெல்லியடி)
- ★ ஜஸ்மிர் ரேடர்ஸ் (சுன்னாகம்)
- ★ எமரெல்ட் H/W (உடுப்பிட்டி)
- ★ கஜமுகன் ஹாட்வெயர்
- ★ லிங்கன் செரமிக்ஸ்
- ★ மருதம் (நெல்லியடி)
- ★ சுந்தரம் H/W (சுன்னாகம்)
- ★ சிவராஜ் ரேடிங் (பருத்தித்துறை)

கட்டட பொறியியலாளர்கள், ஒப்பந்தகாரர்கள், கட்டடக்கலைஞர்கள் மற்றும் ஏனையோரும் மேலதிக விவரம்பெற

ஜீவா கொம்யூனிக்கேசன்
தலங்காவல் பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.
021 - 2223523

(14764)

கண்ணன் வீடியோ
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
0777 - 563080



# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 18**

நாளை (26.02.2003) இடம்பெறவுள்ள இந்தியாவுடனான ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் அலெக்ஸ் ஸ்ருவார்ட் 50 ஓட்டங்களைப் பெறுவாரா?

முழுப்பெயர் : ..............................

முகவரி : ..............................

அ. அட்டை எண்: ..............................

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (26.02.2003) நண்பகல் 12மணிக்குள் தினம் ஒரு பரிசு - 18, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**Super Six பரிசுகள்**

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. ............ 2. ............
3. ............ 4. ............
5. ............ 6. ............

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ..............................

முகவரி : ..............................

அ. அட்டை எண்: ..............................




உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது? (..............................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்? (..............................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..............................

முகவரி : ..............................

அ. அட்டை எண்: ..............................

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 100 ரூபாவுக்கான 50 கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**
Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு ஜமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும்.

## வடக்கு - கிழக்கு பொதுச் சேவை:
# 533 பேருக்கு நியமனங்கள் வழங்க அங்கீகாரம்; மார்ச் 3இல் கடிதங்கள்

காரைதீவு,பெப்.25

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரிலிருந்து 533 பேரை நியமிக்க ஆளுநர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

அதன்படி, பொது எழுதுவினைஞர் பதவிக்கு 330 பேரும், தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு 106 பேரும், தரவுப் பதிவு இயக்குநர் பதவிக்கு 45 பேரும், படவரைஞர் பதவிக்கு 19 பேரும், கணக்குப் பதியுநர் பதவிக்கு 18 பேரும், களஞ்சியக் காப்பாளர் பதவிக்கு 15 பேரும் நியமிக்கப்படவுள்ளனர்.

மாகாணத்தில் பொது எழுதுவினைஞர்களுக்கான வெற்றிடங்களின் தொகை 398 ஆக இருந்தபோதிலும் ஆக 330 பேருக்கே நியமனம் வழங்க ஆளுநர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

பொது எழுதுவினைஞருக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி திருமலையிலுள்ள மாகாண பொது நிர்வாக அமைச்சின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமென அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் தெரிவித்திருக்கிறார்.

இவ்வருடத்தில் மாகாணசபை வழங்கும் முதல் நியமனம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## பளை ஆஸ்பத்திரியின்
# வெளிநோயாளர் பிரிவு சொந்த இடத்தில் இயங்கும்

தென்மராட்சி,பெப்.25

பளை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு விரைவில் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது. வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்துள்ளது. இதனால் தற்போது வெளிநோயாளர் பிரிவு இயங்கும் தனியார் கட்டடத்தில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்துச் சொந்த இடத்தில் உள்ள கட்டடங்களில் ஒன்றைப் புனரமைத்து வெளிநோயாளர் பிரிவை இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது.

வாரத்தில் மூன்று தினங்கள் நடத்தப்படும் வெளிநோயாளர் பிரிவில் சுமார் ஆயிரம் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதால் இடநெருக்கடி ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-117)

# 247 மலையக ஆசிரியர்களின் இடமாற்றங்கள் ரத்தாகின!

## ஆட்சேபனையை அடுத்து ஊவா அமைச்சர் நடவடிக்கை

பண்டாரவளை,பெப்.25

ஊவா மாகாண சபையின் கல்வி, இந்து கலாசார கருத்திட்ட அமைச்சர் ரீ.வி.சென்னனின் ஏற்பாட்டில் ஊவா மாகாண கல்வித் திணைக்களம் 247 தமிழ் ஆசிரியர்களுக்கு வழங்கிய இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பண்டாரவளை, பதுளை, ஹாலி எல, பசறை, அப்புத்தளை, வெளிமடை, ஊவா பரணகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 57 அதிபர்கள் உட்பட 247 ஆசிரியர்களுக்கு கல்வித் திணைக்களம் இடமாற்றம் வழங்கியிருந்தது.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம், ஊவா மாகாண சபை உறுப்பினர்களான சச்சிதானந்தன், குமரன் குருபரன் ஆகியோரின் ஆட்சேபனையின் பேரிலேயே இந்த இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு முரணாகவும் முறையற்ற முறையிலும் இந்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என ஆட்சேபனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பீரிஸ், திஸநாயக்கா குழுவினர் ஐ.தே.க. உறுப்புரிமை பெறுவர்

கொழும்பு,பெப்.25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து பிரிந்து வந்து ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணைந்துள்ள அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்க தலைமையிலான குழுவினர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களாக இணைந்து கொள்ளவுள்ளனர்.

மார்ச் மாதம் 12ஆம் திகதி கண்டியில் நடைபெறுகின்ற விசேட நிகழ்வில் இவர்கள் ஐ.தே.கவின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்கா, மஹிந்த விஜயசேகர, லக்ஷ்மன் கிரியெல்ல, பிரதியமைச்சர் ஜே.விஜயகோன் ஆகியோரே ஐ.தே.கவில் இணையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் திலக் சுமதிபால உட்பட மேலும் பலரும் இவ்வைபவத்தில் ஐ.தே.கவுடன் இணையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)



4 லட்சம் ரூபா "றான்" நிதியில் இருந்து புனரமைப்புச் செய்யப்பட்ட ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் போத்தலில் கள் அடைக்கும் நிலையத்தை நாரந்தனையில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் திறந்துவைப்பதைப் படத்திற்காணலாம். அருகில் சங்க உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (எ-16)

## முல்லைத்தீவு பிரதேச செயலகம் சொந்த இடத்தில

கடந்த 12 வருடங்களின் பின்னர் முல்லைத்தீவு பிரதேச செயலகம் மீண்டும் சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. யுத்தத்தால் மிக மோசமாகச் சேதமடைந்த இக்கட்டடத்தை வன்னிப் பிரதேச புனர்நிர்மாண அமைச்சு புனரமைத்தது.

இதுபோன்று வேறு பிரதேசங்களில் சேதமடைந்த நிலையிலுள்ள கட்டடங்களை மீளப் புனரமைக்கத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

முல்லைத்தீவு பிரதேச செயலகம் புதுக்குடியிருப்பில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பளைப்பகுதியில் 14 முன்பள்ளிகள்

தென்மராட்சி,பெப்.25

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினால் இதுவரை 14 முன்பள்ளிகள் அமைக்கப்பட்டு இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கோவில் வயல், இயக்கச்சி, முகாவில், மாசார், முருகந்தநகர், தர்மக்கேணி, முல்லையடி, புலோப்பளை கிழக்கு, வண்ணான்கேணி, பளை நகரம், புலோப்பளை மத்தி, அரசர்கேணி, உரணிபற்று ஆகிய இடங்களில் முன்பள்ளி அமைகப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## வட்டு. மத்திய கல்லூரி மாணவருக்கு ஜனாதிபதி விருது

வட்டுக்கோட்டை,பெப்.25

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி சாரணர் குழுவைச் சேர்ந்த சிவபாலன விஜயராகவனுக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கம் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆதரவில் நடத்திய உலக சாரணர்தின விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட ஆணையாளர் ந. சௌந்தரராஜன் விஜயராகவனுக்கு இந்த விருதினைச் சூட்டிக் கௌரவித்தார். (எ-ரி)

## வண்டிலால் விழுந்து வயோதிபர் காயம்!

இளவாலை,பெப்.25

வீதியில் சென்றுகொண்டிருந்த மாட்டு வண்டியில் பூட்டப்பட்டிருந்த காளை மாட்டை கட்டாக்காலி மாடொன்று இடித்ததில் வண்டிலைச் செலுத்திய வயோதிபர் தவறிவிழுந்தார். இதில் வண்டில் சக்கரங்களில் ஒன்று அவர் கால்மீது ஏறியதில் அவர் காயமடைந்தார்.

இளவாலை சென்.ஜேம்ஸ் வீதியில் நடந்த இச் சம்பவத்தில் மாதகலைச் சேர்ந்த நடராஜா என்பவரே காயமடைந்தார். இளவாலை பொலீஸ் நிலையப் பகுதியில் திரியும் மாடே வண்டில் மாட்டை முட்டித் தள்ளியதாகக் கூறப்படுகிறது. (ஒ-48)

## வணிக அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்க முடிவு

தென்மராட்சி,பெப்.25

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் வணிக நிலையங்களை ஆரம்பித்துள்ள மன்ற அங்கத்தவர்களுக்கு வணிக அபிவிருத்திக்காக கடன்கள் வழங்கும் திட்டத்தினை மார்ச் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

மன்ற அங்கத்தவர்களுக்கு 20 ஆயிரம், 30ஆயிரம், 50ஆயிரம் வீதம் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இக்கடன்கள் பெறுவதற்கென மன்றத்தில் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் மன்ற கடன் வழங்கும் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# வாசகர் திருமுகம்

## மாணவரின் வாழ்க்கையை தொலைக்காட்சி சீரழிக்கின்றதா?

ஓய்வுபெறப்போகும் ஆசிரியை செல்வி சாரங்கபாணி சுசி அவர்கள் எழுதிய 'மாணவரின் வாழ்க்கையைச் சீரழிக்கும் தொலைக்காட்சிக் கலாசாரம்' என்ற கட்டுரையைப் படித்துப் பார்த்து நான் மனம்மிக வருந்தினேன். தொலைக்காட்சியில் வரும் 'டிஸ்கவரி', 'ஜியோக்கிறபிக் சனல்' போன்ற நிகழ்ச்சிகளை அவர் பார்த்திருப்பாரோ தெரியவில்லை.

எந்த ஒன்றிலும் நன்மையும் தீமையும் இணைந்தே காணப்படும். நெருப்பினால் அழிவு வேலைகளும் ஆக்க வேலைகளும் நடைபெறுகின்றன. மின்சாரத்தினால் ஆபத்துக்களும் நன்மைகளும் ஏற்படுகின்றன. நெருப்பு, மின்சாரம், தொலைக்காட்சி என்பவற்றை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே நன்மையும் தீமையும் அமைகின்றன.

தொலைக்காட்சி கற்பனை வளத்தைக் குறைக்கிறது எனக் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார். அது உண்மையா என ஆராய்ந்து பார்க்கவேண்டும். சிலரது கற்பனைகளைக்கொண்டுதான் தொலைக்காட்சியில்வரும் காட்சிகள் அமைக்கப்படுகின்றன. அவற்றைப் பார்ப்பவர்கள் தங்கள் கற்பனைத்திறனால் தொலைக்காட்சியில் வந்த காட்சிகளைவிட சிறந்த காட்சிகளைத் தம் மனத்தில் அமைத்துப் பார்க்கக்கூடும். எதிர்காலத்தில் அவர்கள் தொலைக்காட்சிக்கான காட்சிகளைச் சிறந்த முறையில் அமைப்பவர்களாக வரக்கூடும்.

சிறுவர் சஞ்சிகைகளையும் வேறு சஞ்சிகைகளையும் வெளியிடுவதற்குத் தொலைக்காட்சி இடையூறாக இருக்கவேண்டியதில்லை. தொலைக்காட்சியைத் தொடர்ந்து வந்த அகில கணனிக் காட்சிகள்மூலம் இன்று உலகம் முழுவதற்குமான சஞ்சிகைகளை வெளியிடக்கூடியதாக இருக்கிறது.

இந்தியாவில் இருந்து நல்ல படங்கள் அருமையாகவே வருகின்றன. படங்களை எடுப்பவர்கள் பணம் ஒன்றையே குறிக்கோளாக வைத்துப் படங்களை எடுக்கிறார்கள். இதனால்தான் வல்லுறவுகளையும் கொலைகளையும் சண்டைகளையும் படங்களில் காட்டி, பார்ப்பவர்களை அழவைத்துப் பணத்தையும் பறித்துச் செல்கிறார்கள்.

நல்ல கருத்துக்களைக் காட்டுவதன்மூலம் நல்ல சமூகத்தை உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் படமுதலாளிகளுக்கு இல்லை. இதிகாசங்கள், புராணங்கள், நாட்டுக்கூத்துக்கள் என்பவற்றில் நல்ல கருத்துக்கள் உள்ளன. பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் மதிப்பது நல்ல பழக்கங்களாகும். வீதியை மூடி சைக்கிளில் செல்லும் மாணவர்களால் இன்று வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

நல்ல பழக்கங்களைக் காட்டி, சமுதாயத்தைத் திருத்தக்கூடிய நல்ல கதைகளைப் படமாக்குவோர் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். பட முதலாளிகள் விடும் பிழைகளைச் சுட்டிக் காட்டுவதற்குப் பதிலாக தொலைக்காட்சி, சினிமா போன்ற விஞ்ஞான முன்னேற்றக் கருவிகள் மீது குறைகூறலாமா?

ஒருவன் கத்தியால் இன்னொருவனை வெட்டினால் அது கத்தியின் குற்றமா? அல்லது வெட்டியவனின் குற்றமா? எத்தனை நல்ல தேவைகளுக்கு கத்தி பயன்படுகிறது! மனிதனை மனிதன் சுட்டுக் கொல்கிறான் என்றால், அப்படிச் சுட்டுக் கொலை செய்பவன் குற்றவாளியா? அல்லது அவன் சுடுவதற்குப் பாவித்த கருவி குற்றமிழைத்ததா?

மனிதனுக்கு இடையூறாக இருக்கும் மிருகங்களை, குரங்குகளை, விசர்நாய்களைச் சுட்டுக்கொல்வதை விட்டுவிட்டு எடுத்ததெற்கெல்லாம் சண்டைகளும், சூடுகளும்தானா தீர்வு? இத்தகைய பிழையான காட்சிகளைப் படங்களில் காட்டக்கூடாது என மக்கள் குரல் வலுப்பெறவேண்டும்.

எந்த ஒரு பிரச்சினையையும் பேசித்தீர்க்கமுடியும் என்பதைக் குடும்ப மட்டத்திலும் நாட்டு மட்டத்திலும் உணர்த்தக் கூடிய நல்ல படங்களை உருவாக்கப் படம் எடுப்பவர்களைத் தூண்ட மக்கள் முன்வரவேண்டும். எந்தப் பிரச்சினைகளிலும் உண்மையான காரணத்தைக் கண்டறிந்து தீர்வுகாணவேண்டுமே தவிர, விஞ்ஞானக் கருவிகள்மீது குற்றம் காணக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*மீசாலை.* **க.மல்லிகா**

## கேரதீவு – சங்குப்பிட்டி வீதி திறக்கப்படுவது அவசியம்

உலக மயமாக்கல் காரணமாக உள்ளங்கையில் உலகம் என்னும் அளவுக்குப் பல நாடுகள் முன்னேறியிருக்கும் இன்றைய காலத்தில் நாம் ஒரு மாவட்டத்தில் இருந்து இன்னொரு மாவட்டத்துடன் போக்குவரத்து தொடர்பற்று இருக்கின்றோம். அதாவது, யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்குச் செல்வதற்கு ஒரேயொரு தரைவழிப்பாதையே உள்ளது. போக்குவரத்து நெருக்கத்தால் நாளாந்தம் விபத்துக்களால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன், நீண்ட தூர பயணம், பணச் செலவு, பிரயாண அலைச்சல், பிரயாணத்தில் காலதாமதம் போன்ற தடங்கல்களை மக்கள் எதிர்நோக்குகின்றனர். இவற்றினைத் தவிர்ப்பதற்கு சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையினை மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிப்பதுடன் சங்குப்பிட்டிக்கும் கேரதீவுக்கும் இடைப்பட்ட 600 மீற்றர் தூரமான கடற்பரப்பினை பாலம் அமைத்து இரண்டு வீதியினையும் இணைப்பதன் ஊடாக பூகோள ரீதியிலும் பொருளாதார ரீதியாகவும் மக்கள் சிறந்த பயனை அடையக்கூடியதாக இருக்கும். இதனைச் செய்யவேண்டியது மிகவும் அவசியமானதும் அவசரமானதும் ஆகும். இதற்கு சம்பந்தப்பட்டோர் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவ்வாறு செய்வார்களேயானால் அவர்கள் தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டு மக்கள் அனைவரும் அதன் பயனைப் பெற்றுக்கொள்வார்கள்.

*தனங்களப்பு.* **கே.அஜித்.**

# காங்கேசன்துறைக்கு புதிய சாரண ஆணையாளர்

வட்டுக்கோட்டை,பெப்.25

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க புதிய மாவட்ட ஆணையாளராக கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய அதிபர் சுசிவபாத ரெட்ணம் பதவியேற்றுள்ளார்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆதரவில், காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கம் நடத்திய உலக சாரணர்தின விழா சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் மாவட்ட ஆணையாளர் ந.சௌந்தரராஜன் புதிய மாவட்ட ஆணையாளர் சிவபாதரெட்ணத்திற்கு நியமனக் கடிதத்தை வழங்கி சம்பிரதாய பூர்வமாக மாவட்ட ஆணையாளர் பதவியைக் கையளித்தார். (எ-ரி)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### கார் விற்பனைக்கு

கில்மன் கண்டர் வகைக் கார் (2003ஆம் ஆண்டு முடிவுக்குரிய வாகன வரி செலுத்தப்பட்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.பரராஜசிங்கம், 42, புங்கன்குள வீதி, கொழும்புத்துறை. T.P. 5623.

(14903)

### தவறிவிட்டது

இணுவில் கிழக்கைச் சேர்ந்த கோ.நிதர்சன் என்பவருடைய பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறுவதற்கான வைத்தியசாலை ஆவணம் சுன்னாகத்தில் (24-02-2003) திங்கட்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூ.கோபிதரன், இணுவில் கிழக்கு, இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் T.P. 021 2225544 (சன்மானம் வழங்கப்படும்).

(14907)

விந்தனை, வல்வெட்டியைச் சேர்ந்த வே.தவச்செல்வம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 821682126V), ஒரு தொகைப்பணம், கைத்தொலைபேசி என்பன யாழ். பஸ் நிலையத்தில் (23.02.2003) ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (சன்மானம் வழங்கப்படும்).

(14904)

## விற்பனையாளர் தேவை

எலக்ரோனிக் பொருள்கள் விற்பனை செய்வதில் அனுபவம் வாய்ந்த விற்பனையாளர் ஒருவர் தேவை.
வயது 22 - 40 (ஆண்)

தொடர்பு:

**அருண் வீடியோ**

*பிரதான வீதி, நெல்லியடி.* ☎ 0777 730332

(14911)

## தேவை

**FUJI (கலர் லாப்) COLOUR LAB** இற்குப் பின்வருவோர் தேவை (ஆண்).

1. பிரின்ரிங் தெரிந்த Technician
2. Printing பயிற்சி பெற விரும்புவோர்

தொடர்பு:

**ஸ்டார் கலர் லாப்**

மெயின் வீதி, நெல்லியடி. ☎ 0777 730332

(14910)

## ஈழத்துத் தமிழ்ப் புலவர் மாநாடு - 2003

**மே 14, 15, 16**

இம்மாநாட்டில் பங்குபற்றும் பண்டிதர், புலவர், வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர் ஆகியவர்கள் தங்கள் பெயர், முகவரி, தகைமை ஆகியவற்றைத் தமிழவேள், *126, காலி வீதி, தெஹிவளை (வடக்கு)* எனும் முகவரிக்கு மிக விரைவில் அனுப்பி உதவுக. மாநாட்டுச் சிறப்புமலரில் இவை இடம்பெறும். பண்டைய தமிழ்ப் புலவர் மரபு இந்நாட்டில் தொடர்ந்து நிலைபெற இம்மாநாடு உதவும்.

(C/26677) - **அமைப்பாளர்கள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 24 - 12 - 1922

உதிர்வு 26 - 01 - 2003

### திருமதி நாகம்மா சரவணமுத்து

எம்குடும்ப குலவிளக்காய்
எல்லோருக்கும் இனியவராய்
எமை எல்லாம் வளர்த்தெடுத்து
ஏற்றமுடன் வாழ வைத்த
எங்கள் இனிய அன்னையின்
ஆத்மா சாந்தி பெற
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*"லட்சுமி இல்லம்"*
*நவிண்டில்,*
*கரணவாய்வடக்கு, கரவெட்டி.*

- குடும்பத்தினர்.

(14909)

## கண்ணீர் அஞ்சலி

### அப்பாப்பிள்ளை சொக்கலிங்கம்

(சட்டத்தரணியும், பிரசித்தநொத்தாரிசும்)

எங்கள் கல்லூரியின் பழைய மாணவியும், முன்னாள் ஆசிரியையும், பழைய மாணவர் சங்க உறுப்பினரும், கனடா, லண்டன் பழைய மாணவர் சங்க உறுப்பினருமான **திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம்** அவர்களின கணவரின் மரணச் செய்திகேட்டு பெரிதும் துயரடைகின்றோம். அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,*
*பழைய மாணவர் சங்கம்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,*
**யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.**

(14912)

## மரண அறிவித்தல்

### திருமதி
### செல்லத்துரை பராசக்தி

இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியைச் சேர்ந்த செல்லத்துரை பராசக்தி 22.02.2003 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலாயுதர் செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுசிலாதேவி, பரஞ்சோதி மற்றும் இராசமணி, செல்வம், இராஜேஸ்வரி, கண்ணதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கராசா காலஞ்சென்ற வசந்தாதேவி மற்றும் சிறிகாந்தன், அம்பிகாபதி, குலத்திலகர், தமயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் கணேசபிள்ளை, சந்திரசேகரம்பிள்ளை, சுந்தரலிங்கம், சிவசுப்பிரமணியம், தியாகராசா, கனகலிங்கம், பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நமசிவாயம், பெரியதம்பி, சுப்பிரமணியம், இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் நவபாலன் (சத்தியபாமா), அம்பிகைபாலன் (தேவா), சிறிசாலினி ஜெகதீஸ்வரன், தேவிசுபாலன் (சுர்சினி), வசந்தபாலன் (சந்திரகலா), சுஜிகலா - பாலசந்திரமோகன் (தாட்சாயினி), சந்திரகாசன், கார்த்திகாயினி, உமையாபதி, பிரதீஸ், திருமாபதி, சர்மிளாபதி, கருணாகரன், சுசித்ரா, சங்கீதா, கோகிலன், லக்ஸ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விதுரபன், விதுனா, புவனராஜ், துர்சாலினி, சங்கவி, பாலினி, சோபினி, பிரணவன், லக்ஷி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 26.02.2003 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*மஞ்சத்தடி,*
*இணுவில்.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(14902)


**PRINCE**

**துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்**

**பிரின்ஸ்**

**நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்**

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்

**சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**

காட்சியறை: 316, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575663


விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## விற்பனைக்கு

ஹோட்டல், உணவுச்சாலைகளில் உடனுக்குடன் பிஸா (PIZA) பேஸ்ர், கேக் முதலியன தயாரிக்கக் கூடிய மினி அவன் (MINI OVEN) ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு-
*இல.118 பிரதான வீதி,*
*மடத்தடி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.021-2223462

(149[illegible])

உலகப் புகழ் பெற்ற L.G
ஓடியோ
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



**LG**

**JAFFNA ELECTRICALS**
Authorised Dealer For
**Abans**

141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

(C-26637)

# குடாநாடு பாலைவனமாவதைத் தடுக்க நீர் சேமிப்பு நடவடிக்கையில் 'நியாப்' ஆர்வம்

**உலக வங்கியின் உதவியுடன் வடக்குக் கிழக்கில் செயற்படுத்தப்படும் 'நியாப்' திட்டம் குறித்த இந்த ஆக்கம் யாழ். மாவட்ட 'நியாப்' அலுவலகத்தால் வெளியிடப்படுகிறது.**

வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் அதன் அயற் பிரதேசங்களிலும் ஆயுத முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறைந்த பட்ச உற்பத்தி மட்டங்களை வழங்குவதற்கு ஏற்ற வகையிலே விவசாய நடவடிக்கைகளையும், சிறிய அளவிலான நீர்ப்பாசன புனரமைப்புச் செயற்பாடுகளையும் ஆரம்பிப்பதன்மூலம் உதவியளிப்பதும் நிலையான பொருளாதார மீளிணைப்பிற்காக அவர்களின் ஆற்றல்களைக் கட்டி எழுப்புவதுமே நியாப் திட்டத்தின பிரதான குறிக்கோளாகும்.

இக்குறிக்கோளை இலக்காகக் கொண்டு நியாப் தனது செயற்பாட்டுப் பிரதேசங்களில் சிறு குளங்களைப் புனரமைப்பதன்மூலம் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்து வருகின்றது. குளங்களை அடிப்படையாகக் கொண்டே உதவி வழங்கும் மையக் கிராமங்களும தெரிவுசெய்யப்படுகின்றன. இத்தகைய புனரமைப்பு நடவடிக்கைகளினால் பயனடையாத மக்களுக்கு ஜீவனோபாய ஆதாரத் திட்டம்மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றன.

குளங்களையும் மையக் கிராமங்களையும் தெரிவுசெய்தல், கிராமிய வீதிகளை அமைத்தல், குடிதண்ணீர்க் கிணறுகளை அமைத்தல், ஜீவனோபாய உதவிகள் வழங்கல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் அவ்வப் பிரதேசத்திற்குப் பொறுப்பான அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்தாசையுடனும், கிராமமட்ட அரச அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள், அரச அதிபர் ஆகியோரின் சிபாரிசு

**சி.வன்னியகுலம்**

-அங்கீகாரத்துடனும மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மேற்கூறிய அடிப்படையிலேயே நியாப் தனது பணிகளை முன்னெடுத்துள்ளது. ஆனாலுங்கூட, அங்கு அதன் புனரமைப்புச் செயற்பாடு குறித்து மீளாய்வு செய்யப்படவேண்டுமென்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் சில குறிப்பிடத்தக்க விடயங்கள்:-

அ) யாழ்.குடாநாட்டில் விவசாய நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் குளங்கள் பெருமளவிற்கு முக்கியத்துவமற்றவை.

ஆ) குளங்களை அடிப்படையாகக் கொண்டு மையக் கிராமங்கள் தெரிவுசெய்யும் நடைமுறை மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

இ) குடாநாட்டில் தரைக்கீழ் நீர் மட்டத்தைப் பேணுவதில் குளங்களின் பங்களிப்பு கேள்விக்குரியது.

இந்த விடயங்கள் குடாநாட்டு மக்களின் பாரம்பரியமான நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளன. எனவே, இவைபற்றி ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடுகள் எழுந்துள்ளன. இவ்விடயம் யாழ்ப்பாண அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவரது ஏற்பாட்டின் பேரில், இவ்விடயங்கள் பற்றி ஆய்வுகளை மேற்கொள்வதற்காகத் 'துறைசார் நிபுணர்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் புகற்பவியல், நீர்வளம் நீர்ப்பாசனவியல், கிராமிய பொருளியல், சமூகவியல், நிறுவன அமைப்பியல், சூழலியல் துறைசார்ந்த ஆறு நிபுணர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களின் அறிக்கை கிடைத்ததும் நியாப்பினால் தற்போது குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மட்டுப்படுத்தப்பட்ட புனரமைப்புப் பணிகள் முழுஅளவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

## நீர் சேமிக்கும் பாரம்பரிய வழிமுறைகள்

யாழ்.குடாநாட்டில் சிறுகுளங்கள், குட்டைகள், துரவுகள், நீர்த்தேக்கங்கள் மூலம் மழைநீர் சேகரித்து வைக்கப்படுகின்றது. வடகீழ்பருவக் காற்றுக் காலத்தில் கிடைக்கும் மிதமிஞ்சிய மழைநீர் இந்நீர்நிலைகளில் சேமிக்கப்பட்டு வருடம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது. மனிதனதும், மந்தைகளினதும் நீர்த்தேவையை இந்நீர்த்தேக்கங்களே வருடம் முழுவதும் பூர்த்திசெய்கின்றன.

குடாநாட்டில் 900இற்கு மேற்பட்ட

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

குளங்கள் காணப்படுகின்றன. இக்குளங்கள் நீர்ப்பாசனத் தேவைக்காகப் பயன்படுத்தப்படாத போதும் பயிர்ச் செய்கையில் அவற்றின் பயன்பாடு மிக முக்கியமானதாகும். குடாநாட்டின தரையமைப்பு குளங்களிலிருந்து நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளுமளவிற்குச் சாதகமானதன்று. வயல் நிலங்களின் மத்தியிலே அயலிலே காணப்படும் இக்குளங்கள் வயல் நிலத்தினை விடத் தாழ்வான மட்டத்திலுள்ளன. வயல்களில் தேங்கும் மிதமிஞ்சிய மழைநீர் வழிந்தோடிச் சென்று தேங்கும் நிலையங்களாகவே குளங்கள் அமைந்துள்ளன. எவ்வாறெனினும் குடாநாட்டில் வயல்நிலங்களை அண்மிய பகுதிகளில் குளங்கள் அமைந்திருப்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

குடாநாட்டில் நிலையான பயிர்களைப் பேணுவதற்கும் மரக்கறிப் பயிர்ச்செய்கைக்கும் குளங்களின் நீர் தரைக்கீழ் நீராகப் பயன்படுத்தப்படுகிறது. மழை பொய்த்தால் வரட்சியிலிருந்து பயிர்களைக் காப்பதற்காக சில பகுதிகளிலே நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் வயல்களுக்கு நீர் பாய்ச்சப்படுவதும் உண்டு.

யாழ்.குடாநாட்டின் தரை சுண்ணாம்புப் பாறையாலானது. இப்பாறைகள் மழைநீரில் கரையும் தன்மை கொண்டிருப்பதுடன் இலகுவில் நீரை உட்புகவிடும் இயல்பு கொண்டவை. இதனால் குளத்தில் தேங்கும் நீர் கசிந்து நிலத்தினடியில் சென்று தரைக்கீழ் நீருடன் இணைகின்றது. இதனால் தரைக்கீழ் நன்னீர் மட்டம் பேணப்படுகின்றது. வரட்சிக் காலத்தில் இந் நன்னீர் மட்டம் வற்றி விடுவதனாலேயே கிணறுகளில் உவர்நீர் பெறப்படுவதாக நம்பப்படுகின்றது.

குடாநாட்டில் ஆங்காங்கே தரைக்கீழ் குகைகள் காணப்படுகின்றன. குறுகிய வாயில்களுடைய இக்குகைகள் சில தரைக்கீழ் நீர்மட்டத்துடன் தொடர்புடையவை. சில குளங்களின் நீரேந்துப் பரப்பிலே (விளிம்புகளிலே) இத்தகைய குளங்களின் வாயில்கள் அமைந்துள்ளன. குளத்தில் மழைநீர் நிரம்பும் போது மிதமிஞ்சிய மழைநீர் இக்குகைகளினூடாக தரைக்கீழ் நீர்மட்டத்தைச் சென்றடைகின்றது. இதன்மூலம் தரைக்கீழ் நீர்மட்டம் பேணப்படுகின்றது. சில குகைகளினூடாக நீர் கடலைச் சென்றடைகின்றது. குடாநாட்டில் வெள்ளப்பெருக்கைத் தவிர்க்கும் இயற்கை வடிகாலமைப்பாக இக்குகைகள் விளங்குகின்றன.

கிணறுகளிலும், குளங்களிலும் சேமிக்கப்பட முடியாத மிதமிஞ்சிய மழைநீர் கடல் நீரேரிகளைச் சென்றடைகிறது. இக்கடல்நீரேரிகளின் உவர்நீரை நன்னீராக்கும் நடவடிக்கைகள் தொன்று தொட்டு குடாநாட்டில் இடம்பெற்று வருகின்றன. தொண்டமானாற்று உவர்நீர்த் தடுப்புத் திட்டம் இவற்றில் மிகப் பழைமையானது. இத்தகைய திட்டங்கள் சிலவற்றை காரைநகர் வடக்கிலும் புளியங்கூடலிலும், சரவணையிலும் நியாப் இனங்கண்டுள்ளது. குறித்த கடல்நீரேரிகளில் உவர்த்தன்மையைக் குறைத்து நன்னீராக்க முடியும் எனவும், அத்துடன் அப்பிரதேசத்தை பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடல்நோக்கி வழிந்தோடும் மழைநீரை அணைகளிட்டுத் தடுத்து நன்னீர்த் தேக்கங்களை உருவாக்கும் நடைமுறையும் குடாநாட்டில் பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காரைநகர், வேலணை போன்ற இடங்களில் இத்தகைய நீர்த்தேக்கங்கள் பெருமளவில் உருவாக்கப்பட்டுள்ளன.

### குடாநாட்டு மக்களின் இடையறா முயற்சி

தரைக்கீழ் நன்னீர், குடாநாட்டு மக்களின் உயிர்நாடியாகும். இது இயற்கையின் நன்கொடையாகவே கருதப்படுகிறது. இதனால்தான் தரைக்கீழ் நன்னீர் மட்டத்தைப் பேணுவதற்காக பாரம்பரியமான பல நடவடிக்கைகளை குடாநாட்டு மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டில் தரைக்கீழ் நன்னீர் மட்டம் மிக வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதாகவும், இதனால் இன்னும் 25வருட காலத்தில் யாழ்.குடாநாடு பாலைவனமாகிவிடுமெனவும் 35வருடங்களின் முன்னர் இஸ்ரேலிய விஞ்ஞானிகள் எச்சரித்திருந்தனர். இந்த அச்சுறுத்தலையும் தமது பாரம்பரியமான நீர் சேமிக்கும் நடவடிக்கைகள் மூலமாகவே வெற்றிகொண்டு வருவதாக குடாநாட்டு மக்கள் நம்புகின்றனர்.

எவ்வாறெனினும், இந்த நம்பிக்கைகள் வெறும் ஊகங்களாகவோ, கட்டுக்கதைகளாகவோ, கர்ணபரம்பரைக் கதைகளாகவோ இருந்துவிடக்கூடாது. இவை விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இதற்காகவே துறைசார் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. நியாப் எச்சந்தர்ப்பத்திலும் குடாநாட்டு மக்களின் அபிலாஷைகளை புறக்கணிக்க மாட்டாது. ஆய்வுக்குழுவின் அறிக்கை கிடைத்ததும் அதனடிப்படையில் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இவ்விடயம் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. ஆர்வமுடையோர் தமது கருத்துக்களை எழுத்து வடிவில் தயாரித்து யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்குமாறும் அவை பற்றி ஆய்வுக்குழு கவனத்திலெடுக்குமெனவும் நியாப் திட்டப் பணிப்பாளர் பீ.இராமநாதன் தெரிவித்துள்ளார். ★

**வாசகர்களுக்கு!**

விவசாயச் செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு தொடர்பான தரமான ஆக்கங்கள் விவசாயிகளிடமிருந்தும் துறை சார்ந்த நிபுணர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப் படுகின்றன.

குடாநாட்டு விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பில் பிரச்சினைகள், பாதுகாப்பு, நவீன தொழில்நுட்ப முறைப் பிரயோகம், புவியியல் மாற்றங்கள் சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கியதாக கட்டுரைகள் அமையவேண்டும்.

தரமான ஆக்கங்கள் 'கமமும் புலமும்' பகுதியில் வாராந்தம் பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)





குடாநாட்டில் பல பகுதிகளிலும் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பமாகியிருக்கிறது. இருபாலைப் பகுதியிலுள்ள வயலில் அறுவடை செய்து அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் நெற்கதிர்களை முதற்படத்திலும் விவசாயிகள் நெல்லை தூற்றுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.
(படம்: பொ.இராஜேஸ்வரன் - வலி.கிழக்கு செய்தியாளர்)

# குடாநாட்டில் பெருகிவரும் அலங்காரத் தாவர வளர்ப்பு

அலங்காரத் தாவரங்களையும் மரக்கறிப் பயிர்களையும் பூச்சாடிகளில் அல்லது உரைப்பைகளில் பெரும்பாலானோர் தற்பொழுது வீடுகளில் வளர்ப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக நகர்ப்புறங்களில் இது பெரிதும் பிரபலம் அடைந்து வருகிறது. இதற்குக் காரணம் நகர்ப்புறங்களில் நிலவும் இட நெருக்கடி,



நேரம் போதாமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

அலங்காரத் தாவரங்கள் நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாவது வழக்கம். பூச்சாடிகளில் அல்லது உரைப்பைகளிலுள்ள தாவரங்களில் பங்கஸ், வைரஸ், பக்ரீரியா போன்ற நோய்கள் ஏற்பட்டாலும் அவை பரவலாக ஏற்படாது. அசாதாரண நிலை, பொருத்தமற்ற சூழல், பராமரிப்பு முறை போன்றவற்றால் நோய்கள் ஏற்படலாம் எனவே, இப்பயிர் செய்கை தொடர்பான அறிவைக் கொண்டிருப்பதன்மூலம் இந்நிலைமையைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.

▲ இலை நுனி கபில நிறமடைதல் அல்லது கருகுதல்:-

அதிகளவில் நீர் ஊற்றுதல், முதலில் நீர் ஊற்றிய பின்னர் அடுத்த தடவை நீர் ஊற்றுவதற்கு இடையிலான நேரத்தில் அதிக இடைவெளி

**வைஷாலி**

ஏற்பட்டால் மண் உலர்ந்து போதல், அளவுக்கு அதிகமாகப் பசளையிடல், மண் உப்புத்தன்மை காணப்பட்டால் வேரின் வளர்ச்சி பாதிக்கப்படுதல், போசணைப் பொருள்கள் நஞ்சாக மாறுதல், குறைந்தளவான ஈரப்பதன் ஆகியவற்றால் இந்நிலை ஏற்படலாம்.

▲ இலைகளில் புள்ளிகள், அழுகல், கட்டிகள் போன்றன உருவாகுதல்:-

அதிக சூரிய வெப்பத்தால் இலைகள் கருகிப் போதல், மண் அதிகமாக உலர்ந்துபோதல், சில பிரதேசங்களில் நிலவும் அதிகளவிலான குளிர், இரசாயனப் பொருள்களால் நச்சுத்தன்மை ஏற்படல், நீர் வடிந்து செல்லாது தேங்கி நிற்றல், பங்கஸ் அல்லது பக்ரீரியாத் தாக்கம் ஆகியவற்றால் ஏற்படலாம்.

▲ முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமடைதல்:-

நைதரசன் குறைபாடு, நீண்டகாலம் சாடிகளில் வைத்திருப்பதால் வேர் வளர்ச்சி பாதிக்கப்படல், மண் கடினமாகக் காணப்படல், நீர்வடிந்து செல்லாது காணப்படல் குறைந்த சூரிய வெளிச்சம் ஆகியவற்றால் ஏற்படலாம்.

▲ இளம் இலைகள் மஞ்சள் நிறமாதல்:-

மண்ணின் அமிலத் தன்மையில் ஏற்படும் மாற்றங்கள், நுண்போசணைச் சத்துக்கள் சமமின்றிக் காணப்படல் போன்றவற்றால் ஏற்படும்.

▲ இலைகள் உதிர்தல்:-

அளவுக்கு அதிகமாக நீர் ஊற்றுவதால் வேர் வளர்ச்சி பாதிக்கப்படல், மண் உலர்ந்து போதல், தேவையேற்படாதபோதும் பசளையிடல்,



வெளிச்சம், வெப்பநிலை, சார்ரப்பதன் என்பவற்றில் ஏற்படும் திடீர் மாற்றங்கள், வேர் அழுகல் போன்றவற்றால் ஏற்படலாம்.

▲ இலைகள் வாடுதல்:-

அதிக அளவான நீர் ஊற்றுதல், நீர்தேங்கி நிற்றல், மண்ணுடன் நச்சுப் பொருள்கள் சேர்தல் ஆகியவற்றால் ஏற்படலாம்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தவிர வேர்கள் கபில நிறமாதல், அழுகுதல், வேரின் மேற்தோல் கழருதல் ஆகியனவும் ஏற்படலாம். எனவே, இவற்றைக் கவனத்திற்கொண்டு உகந்த சூழலை ஏற்படுத்துவதன் மூலம் பூச்சாடிகளில் உள்ள தாவரங்களையும் பயிர்களையும் சிறந்த முறையில் பராமரிக்கலாம். ★

# அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் 169 இலக்கத்தில் இயங்கிவந்த 'மொபிட்டல்' முகவர் தொலைத்தொடர்பு நிலையம் இன்றுடன் மூடப்படுகின்றது. இந்நிலையத்தில் இணைப்புப் பெற்றவர்கள் தமது தேவைகளுக்கு 'ரெலிக்கொம்' நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
169, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/26694)

## உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்

உடற்கல்வித்துறையில் கல்விகற்று வெளியேறிய 1ஆம், 2ஆம், 3ஆம் அணி மாணவர்கள் (வேலையற்ற) உடற்கல்வித்துறை விரிவுரை மண்டபத்தில் நாளை (26.02.2003) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலுக்குச் சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**3ஆம் அணி மாணவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படும்.*

செயலாளர்
ப.தர்மகுமாரன்.

(14932)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் சண்முகநாதன் (சின்னையா)

*ஆசாரி - நயினாதீவு*

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு, காளி கோவிலடியை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் கிழக்கில் வசித்து வந்தவருமான நாகலிங்கம் சண்முகநாதன் (சின்னையா) நேற்று (24.02.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அமராவதி தம்பதிகளின் மகனும் சின்னப்பு - தங்கமுத்து தம்பதிகளின் மருமகனும் சிவபாக்கியத்தின் கணவரும் புவனேஸ்வரி, சிவலோகநாதன், தையல்நாயகி, கணேசலிங்கம், காலஞ்சென்ற கந்தவேள் மற்றும் பிரேமாவதி, அருள்மணி ஆகியோரின் தந்தையும் சோமசுந்தரம், பங்கயற்செல்வி, பரமேஸ்வரன், சிவகாமி, கமலன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, அன்னமுத்து, செல்லத்துரை மற்றும் தருமலிங்கம், முத்தையா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற நாகரெத்தினம் மற்றும் நடராசா, கார்த்திகேசு ஆகியோரின் மைத்துனரும் அருளீசன், சிவனேசன், சோதீசன், யுகதீசன், தனுஷா, யுகதாசன், சிந்துஷா, கம்சா, சங்கரி, சரண் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.02.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் கிழக்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*14/1, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (14935)

தகவல்:
க.சோமசுந்தரம் (மருமகன்)

## ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம்.பெப்.25

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திறன் விருத்தி மையத்தின் ஆடைகளின் காட்சியும் விற்பனையும் நாளை புதன்கிழமையும் மறுதினம் வியாழக் கிழமையும் முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், இணுவில் பயிற்சி மையத்தில் (இணுவில் மக்லொட் வைத்தியசாலை) நடைபெறும்.

(ம-ரி)

## பெற்றோரின் சண்டை பிள்ளையின் உயிர் பறித்தது

மட்டக்களப்பு.பெப்.25

மட்டக்களப்பு பெண்கள் கல்லூரி ஒன்றின் மாணவி ஒருவர் வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்படுகிறது.

க.சரண்யா என்ற 14 வயது சிறுமியே இவராவார். பெற்றோருக்கிடையிலான பிரச்சினை காரணமாகவே தற்கொலை செய்வதாக அவர் கடிதம் ஒன்றை எழுதி வைத்துள்ளார் எனவும் கூறப்பட்டது.

(ம)


ராஜா யாழ்ப்பாணம்
6 ஆவது வாரமாக
விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த
வசீகரா
2.30, 6.30 மட்டும். 24 முதல் 26 வரை
SPIDER MAN
காலை 10.30, இரவு 9.30 மட்டும்.

நாகம்ஸ் சுன்னாகம்.
ஷாம், மீராஜஸ்மின், ரகுவரன், P. வாசு நடித்த
பாலா (தீபம்)
காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(14928)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சிம்ரன் நடிக்க
ப்ரியமானவளே
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு (8.45) (புதிய நே.)
M.I.2
(C-26692)


# கடைகள் குத்தகைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் 212 ஆம் இலக்கத்தில் உள்ள மகாலட்சுமி கட்டடம் நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. கட்டடம் முழுமையாகவோ அல்லது தனித்தனிக் கடைகளாகவோ பெற்றுக்கொள்ளலாம். மலசலகூட வசதி, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:-

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/26694)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி மோகனாம்பிகை தம்பிப்பிள்ளை

*(மௌனக்கா - இளைப்பாறிய ஆசிரியை)*

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மோகனாம்பிகை தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று (24.02.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பூரணாம்பிகை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான திருமதி ரமணிகரம் மயில்வாகனம், திருமதி மோகனாம்பிகை (சரசு) சிவப்பிரகாசம், சின்னத்தம்பி (கிளாக்கர்) மற்றும் துரைச்சாமியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2003) செவ்வாய்க்கிழமை பி.ப.4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*189, கண்டி வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (14933)

தகவல்:
திருமதி மோகனாதேவி பரமநாதன்,
திருமதி கமலாதேவி தியாகராஜா,
திருமதி ரமணி மகேந்திரன்.
(பெறாமக்கள்)

## சபாபதிப்பிள்ளை தருமபாலு

*(இளைப்பாறிய கிளைமுகாமையாளர், வேலணை ப.நோ.கூ.சங்கம்)*


வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 179, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தருமபாலு 22.02.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (23.02.2003) ஞாயிற்றுக்கிழமை 179, பிறவுண் வீதியிலுள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*179, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (14931)

தகவல்:
சிவசோதி யோகராஜா - மகள்
(பிரதேச செயலகம், நல்லூர்)


சுடர் ஒளி

பெப்.25 - மார்ச் 03 இதழில்

புலிகளுடன் சேர சிறுவர்கள் முயற்சி
சிறுவரைத் தவிர்க்க புலிகள் உறுதி

தமிழ்த் தேசிய இனத்தை விரோதிக்கும்
இராணுவத்தின் குரோத மனப்பான்மை

யாழ்.குடாநாட்டில் வளமிழந்த பூமிதான்
எமது வருங்கால சந்ததியினருக்கு சீதனமா?

வவுனியா என்றால்
சாரதிகள் நடுக்கம்!

நூல்கள் இல்லாத நூலகம்
தமிழ் மக்களுக்கு அவசியமா?

புரிந்துணர்வு உடன்படிக்கை
ஒரு வருடத்தில் சாதித்தது என்ன?

விலை 14/=

(C-26685)

# வடமேற்கு சீனாவை பூகம்பம் உலுக்கியது!

சீனாவின் வடமேற்கே உள்ள ஜியான் ஜியாங் பிராந்தியத்தை நேற்றுக காலை பாரிய பூமியதிர்ச்சி உலுக்கியது. இதில் குறைந்தது 240 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை நேரப்படி காலை 8மணிக்கு இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

கியார் கிஸ்தான் மற்றும் தஜிக்கிஸ்தானின் எல்லையருகே உள்ள ஜியாஷி நகரிலிருந்து கிழக்கே 40 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்த இந்தப்பூமியதிர்ச்சி 6.8 ரிசடர் அளவைக்கொண்டிருந்தது. வீடுகள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் தகர்ந்து தரைமட்டமாகி உள்ளதாகவும் -

இடிபாடுகளுக்கிடையே சிக்கியவர்களை மீட்கும் பணி நடைபெறுவதாகவும் -

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று நம்புவதாகவும் - ஜியான் ஜியாங் பிரதேச பேரழிவுகள் தடுப்புப்பணியகத்தின் இயக்குநர் ஜாங்ஜொங் தெரிவித்தார். அடுத்தடுத்து இரு பாரிய நிலநடுக்கங்கள் தாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

உய்குர் என்ற இஸ்லாமியப்பிரிவினர் பெரும்பான்மையாக வாழும் ஜியாஷி நகரம் கடந்த காலங்களில் பலமுறை பாரிய பூமியதிர்ச்சிகளை எதிர்கொண்டுள்ளது. ஆயினும் அப்போதெல்லாம உயிரிழப்புக்கள் குறைவாகவே இருந்துள்ளன. ஆனால், இம்முறை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இப்பகுதியில் பூமியதிர்ச்சிகளால் 1996 மார்ச்சில் 20 பேரும் 1997 ஜனவரியில் 12 பேரும் அதே ஆண்டு ஏப்ரலில் 9 பேரும் உயிரிழந்ததும்-

சீனத்தலைநகர் பெய்ஜிங் அருகே 1976 ஆம் ஆண்டு பூமியதிர்ச்சிக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் பலியாகியதும் - குறிப்பிடத்தக்கவை. (ஒ)



ஈராக்குக்கு எதிராக ஐ.நா.பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்படவுள்ள இரண்டாவது தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டுவதில் அமெரிக்கா முழுமூச்சாக ஈடுபட்டுள்ளது. இந்த நடவடிக்கையில் ஒரு கட்டமாக அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் சீனாவின் ஆதரவை கோருவதற்காக சீனா சென்றுள்ளார். அங்கு அவர் சீன தலைவரை சந்தித்தபோது எடுக்கப்பட்டபடம்.



இப்போது ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் உலக அளவில் கதாநாயகன் ஆகிவிட்டார். ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் அபாயம் எழுந்துள்ள சூழ்நிலையில் மிகவும் பிரபலமான தலைவர் யார் என்று கணக்கெடுப்பு நடத்தியதில் சதாம் பிரபலமான தலைவர் எனத் தெரியவந்துள்ளது.

சதாம் ஹுசைனுக்கு சீனாவிலும் கூட செல்வாக்குப் பெருகியிருக்கிறது. பெய்ஜிங் நகர வீதியில் சதாமின் படத்தை ஒரு வியாபாரி கூவி விற்பதைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள். அதன் விலை 7டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அணிசேரா நாடுகளின் 13ஆவது மாநாடு:

# மற்றைய நாடுகளின் எஜமானாக அமெரிக்கா செயற்படுகின்றது!

### மலேஷியப் பிரதமர் தலைமையுரையில் குற்றச்சாட்டு

கோலாலம்பூர்,பெப்.25

பிற நாடுகளின் எஜமான் போன்று அமெரிக்கா செயற்படுவதாக அணிசேரா நாடுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள மலேசியாவின் பிரதமர் மஹதிர் முகமட் குற்றஞ்சாட்டினார்.

அணிசேரா நாடுகளின் 13ஆவது மாநாடு நேற்று மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் ஆரம்பமானது. இதில அணிசேரா நாடுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பு மலேசியாவுக்கு வழங்கப்பட்டது.

மாநாட்டுக்குத் தலைமை வகித்து தொடக்க உரையாற்றிய மலேசியப் பிரதமர் மஹதிர் முகமட்.

"ஈராக் மீது தாக்குதல் நடத்தும் திட்டத்தை அமெரிக்கா கைவிட வேணடும். அமெரிக்கா மற்றைய நாடுகளின எஜமான் போன்று செயற்படுகிறது. ஐ.நாவின் அனுமதி இன்றி எந்த ஒரு நாடும் போரில் ஈடுபட உலக அளவில் தடைவிதிக்கவேண்டும். யுத்தம் எந்த வொரு பிரச்சினையையும் தீர்க்காது. பணக்கார நாடுகள், ஏழை நாடுகளில் பயங்கரவாதத்தை வளர்த்து விடுகின்றன. இதுவே பயங்கரவாதிகள் உருவாகக் காரணமாகின்றன." - என்று தெரிவித்தார்.

அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பிலிருந்து தற்போது விலகும் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி தபோம் பெகி உரையாற்றுகையில் "அமெரிக்கா நடத்த உத்தேசித்துள்ள போர் ஈராக்கை மட்டுமன்றி உலகில் உள்ள அனைத்து ஏழை மக்களையும அச்சுறுத்துகின்றது. தமது எதிர்காலத தைத் தாமே நிர்ணயிக்கும் உரிமையை வறிய, பலவீனமான மக்களிடமிருந்து பறித்தெடுப்பதை ஏற்க முடியாது." என்று கூறினார்.

உலகின் அரைப்பங்கு மக்கள் வசிக்கும் 116 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் ஒன்று கூடியுள்ளனர். (ஒ)

# பயங்கரவாதத்துக்கு விளக்கம் காண்பதில் கருத்து வேறுபாடுகள்

கோலாலம்பூர்,பெப்.25

பயங்கரவாதம் என்பதன் வரைவிலக்கணத்தை வரையறுப்பதில் அணிசேரா நாடுகளுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அணிசேரா அமைப்பைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவிலும் இது குறித்து தொடர்ந்து விவாதித்தனர்.

பயங்கரவாதம் குறித்த வரைவுத் தீர்மானம், அணிசேரா நாடுகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆனால், ஈராக் விவகாரம், பலஸ்தீனர் பிரச்சினை ஆகியவை காரணமாக பயங்கரவாதம எது என்பதை விளக்குவதில் சிக்கல ஏற்பட்டுள்ளது. (ஒ)

# பாகிஸ்தானில் நடந்த விமான விபத்தில் ஆப்கான் அமைச்சர் உட்பட 8 பேர் பலி!

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்து சென்ற சிறிய ரக விமானம் ஒன்று கீழே விழுந்து நொறுங்கியதில் ஆப்கானிஸ்தானின் சுரங்கம் மற்றும் தொழிற்றுறை அமைச்சர் ஜமா முஹமட் முஹம்மதி உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

நேற்று திங்கட் கிழமை உள்ளூர் நேரப்படி காலை 8 மணிக்கு இந்த விபத்து இடம்பெற்றது.

செஸ்னா ரகத்தைச் சேர்ந்த இந்த விமானத்தில் ஆப்கான் அமைச்சருடன பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி முஹமட் பர்கட் அஹமட், ஆப்கான் அதிகாரிகள் மூவர், சீனாவைச்சேர்ந்த தொழில் அதிபர் ஒருவர் மற்றும் இரு விமானிகள் ஆகியோர் இருந்தனர். கராச்சி விமான



நிலையத்தில் இருந்து புறப்பட்ட 29 ஆவது நிமிடத்தில் விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

ஈரானிய எல்லை அருகே பலூசிஸ்தான் மலைப்பகுதியில் மோதி விபத்துக்குள்ளான விமானம் அரபிக்கடலில் மூழ்கியதாகக் கூறப்படுகிறது. விமானத்தில் இருந்தவர்களில் 4 பேரது சடலங்கள் அரபிக்கடலில் இருந்து மீட்கப்பட்டதாக பாகிஸ்தானிய கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

-துர்க்மெனிஸ்தானில் இருந்து ஆப்கான் ஊடாக தெற்காசியாவுக்கு பெற்றோலியத்தை எடுத்து வருவதற்கான குழாய்ப்பாதையை அமைப்பது குறித்து பேச்சு நடத்த ஆப்கான் அமைச்சரும் அதிகாரிகளும் கடந்த சனிக்கிழமை பாகிஸ்தான் வந்து இருந்தனர்.

பாகிஸ்தானில் கடந்த வாரம் நடந்த வேறொரு விமான விபத்தில் பாகிஸ்தானிய விமானப்படைத் தளபதி கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# அன்னை தெரேஸாவுக்கு ஒக்.19 புனிதர் பட்டம்

வத்திகான்,பெப்.25

இந்தியாவின் கொல்கத்தாவைத் தலைமையிடமாகக் கொண்டு சமூக சேவையில் ஈடுபட்டு வந்த அன்னை தெரேஸாவுக்கு ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி புனிதர் பட்டம் வழங்கப்படுகிறது. இத்தாலியில் உள்ள ரோம நகரின் பீட்டர்ஸ் சதுக்கத்தில் இதற்கான விழா நடைபெறுகின்றது.

இந்த விழாவில் உலகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்கிறார்கள்.

இந்தியப் பெண்ணின் வயிற்றில் இருந்த புற்றுநோய் கட்டியை குணப்படுத்தி அற்புதம் செய்ததற்காக அன்னை தெரேஸாவுக்கு இந்தப் புனிதர் பட்டம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (ஒ)

# பின்லேடனின் மகன் ஈரானில்?

வாஷிங்ரன்,பெப்.18

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடனின் மகன் சாத் பின்லேடன் ஈரானில் தஞ்சம் புகுந்துள்ளதாக அமெரிக்க பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பல் மனைவிகள்மூலம் பின்லேடனுக்கு மொத்தம் 27 குழந்தைகள் பிறந்தன. அவர்களில் மூத்தவர் சாத் (வயது 23) இவர் தந்தையுடன் ஆப்கானிஸ்தானில் வசித்தார்.

தலிபான் வீழ்ச்சிக்குப்பிறகு ஆப்கானை விட்டு ஓடிய சாத், ஈரானில் தஞ்சம் புகுந்துள்ளதாக அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது. (ஒ)

# பாகிஸ்தானில் எங்கும் பின்லேடன் மயம்

இஸ்லாமாபாத்,பெப்.25

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் உயிருடன் இருக்கிறாரோ இல்லையோ ஆனால், அவரது உருவம் இடம் பெற்றுள்ள பொருள்கள் பாகிஸ்தானில் எங்கும் காணப்படுகின்றன.

15 மாதங்களுக்கு முன் தலைமறைவானார் அவர். பாகிஸ்தானின் மேற்கு எல்லைப்பகுதியில் அவர் பதுங்கி இருக்கக்கூடும் என்பதை ஆப்கான் மற்றும் மேலைநாட்டு புலனாய்வு அமைப்புக்களின் கணிப்பு.

2001 நவம்பரில் தோரா போரா பகுதியில் அமெரிக்கா கடுமையாகத தாக்குதல் நடத்தியது. அதில் அவர் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால், அவர் அங்கிருந்து தப்பிவிட்டார் என்ற கருத்தும் நிலவுகிறது. அவரை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துக்கொடுத்தால் 2.5 கோடி டொலர் சன்மானம் என்று அறிவித்துள்ளது அமெரிக்கா. ஆனால், இதுவரை யார் கண்ணிலும் அவர் படவில்லை.

ஆனால், அவர் உயிருடன்இருக்கிறாரோ இல்லையோ பாகிஸ்தானில் உள்ள அனைத்து நகரங்களிலும் பொம்மை வடிவிலோ படங்களிலோ பின்லேடனைக் காணமுடிகிறது. பாகிஸ்தானின் தென்மேற்குப்பகுதியான குவேட்டா, வடமேற்கு நகரான பெஷாவர், தலைநகர் இஸ்லாமாபாத், துறைமுக நகரான கராச்சி உட்பட பல நகரங்களில் பின்லேடனின் உருவம் அச்சிடப்பட்ட ரீ சேட்டுக்கள், பொம்மைகள் சீடீக்கள் எங்கும் காணப்படுகின்றன.

இவற்றின் வாடிக்கையாளர்களில கணிசமானோர் பழங்குடி இனத்தவரும் இஸ்லாமிய மதவாதிகளும் தான். பெஷாவரில் விற்பனை ஆகும் சீடீக்களில் மேலைநாடுகளுக்கெதிரான புனிதப்போர் பற்றி ஒஸாமா கூறும்போதனைகள் இடம்பெற்றுள்ளன. துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள், அல்கெய்டா பயிற்சி முகாம்களில் கட்டடங்களை தாக்குவது போன்ற ஒத்திகைகளில் ஈடுபடும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

ஒஸாமா அமர்ந்து செல்வது போன்ற கவசவாகனப் பொம்மைகள் குவேட்டா நகரக் கடைகளில் விறுவிறுப்பாக விற்பனை ஆகின்றது. சிறுவர்கள் இவற்றை விரும்பி வாங்குகின்றனர். இஸ்லாமாபாத் நகரக்கடைகளில் பின்லேடன் உருவம் அச்சிடப்பட்ட ரீ சேட்டுக்கள் விற்பனைக்காக தொங்கவிடப்பட்டுள்ளன. இவற்றை பல்வேறு பிரிவினர் ஆர்வத்துடன் வாங்குகின்றனர். வெளிநாடுகளில் இருந்து வருவோரும் வாங்குகின்றனர். விலையோ மற்ற ரீ சேட்டுக்களை விட 3மடங்காகும். அதாவது 8 டொலர் முதல் 9 டொலர் வரை ஆகும்.(ஒ)

# ஆளில்லா விமானத்தைப் பயன்படுத்தி அமெ. எம்.பிகளை ஒழிக்க சதித்திட்டம்

### புலனாய்வு அதிகாரிகள் தகவல்

வாஷிங்ரன்,பெப்.25

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை கூண்டோடு தீர்த்துக் கட்ட அலகெய்டா தீவிரவாதிகள் மேற்கொள்ளவிருந்த திட்டத்தை தாம் முறியடித்துவிட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க புலனாய்வு துறையினர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

வாஷிங்ரன், நியூயோர்க் உட்பட முக்கிய நகரங்களில் அல்கெய்டா தீவிரவாதிகள் விஷவாயு குண்டுகளை வீசி பெரிய அளவில் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்த திட்டமிட்டு இருந்தனர். இதற்காக ஆள் இல்லாத விமானம் ஒன்றைத் தயாரிப்பதிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். இதற்காக மற்றைய நாடுகளில் இருந்து உதிரிப் பாகங்களையும் வரவழைத்தனர்.

இந்த விமானம் மூலம் கதிர் வீச்சு அபாயத்தை ஏற்படுத்தும் இரசாயன பொருள்களையும் தூவத் திட்டமிட்டு இருந்தனர்.

அமெரிக்க செனட்டர்கள் மற்றும் எம்.பிகளை குறிவைத்து கூண்டோடு கொலை செய்ய தீவிரவாதிகள் திட்டமிட்டு இருந்தது தெரியவந்தது.

கடந்த 12ஆம் திகதி இந்த தாக்கு தலை நடத்த தீவிரவாதிகள் முடிவு செய்து இருந்தனர். ஆனால் உளவுத்துறை முன்கூடியே தகவல் கொடுத்தாலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இதுவரை இல்லா அளவுக்கு தீவிரப்படுத்தப்பட்டதாலும் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுவிட்டது. என்று அவர்கள் தெரிவித்தனர். (ஒ)

## பெண்களுக்கான லுமாலா சைக்கிளைப் பெற்றுக்கொள்ளவும்

குருநகர் சந்தை, துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தில் 18.02.2003 செவ்வாயன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்த 56C67330 இலக்க பெண்களுக்கான லுமாலா சைக்கிளைத் தவறுதலாக மாறி எடுத்துச் சென்றவர்கள் தயவுசெய்து குருநகர் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தில் அல்லது குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள குருநகர் ஐக்கிய கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் சங்கக் காரியாலயத்தில் கொண்டுவந்து ஒப்படைத்து விட்டு தங்களது சைக்கிளை பெற்றுக்கொள்ளும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

குருநகர் ஐக்கிய கடல் உணவு ஏற்றுமதியாளர்கள். ~ நிர்வாகம். (14925)

## யாழ்.மாநகர சபை
### பழைய பொருள்கள் ஏலவிற்பனை

யாழ்.மாநகர சபையினால் பாவிக்கப்பட்ட பழைய பொருள்கள் 27.02.2003 அன்று மு.ப. 9.00 மணிக்கு நல்லூர் இந்துவிடுதி வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றை அன்றைய தினம் காலை 8 மணியிலிருந்து பார்வையிடலாம்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களை மாநகர சபை அலுவலகத்திலும், ஏனைய அரச திணைக்கள விளம்பரப் பலகையிலும் பார்வையிடலாம்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்.
25.02.2003 (C/26689)

## உடனடியாக விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணத்திலுள்ள மின்சாரப் பொருள்கள் மொத்த, சில்லறை விற்பனை நிலையத்துக்கு வர்த்தகம், கணக்கியல் படித்த ஆங்கில அறிவுள்ள

★எழுதுவினைஞர்கள் ★விற்பனையாளர்கள்

உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும்.

**எஸ்.ஜே.எலக்றிக்கல்ஸ்,**
9(2), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(14920)

## தவறவிடப்பட்ட பொருள்கள்

அச்சுவேலி - யாழ். சேவையில் ஈடுபட்ட சிற்றூர்திகளில் பிரயாணிகளினால் பின்வரும் பொருள்கள் தவறவிடப்பட்டுள்ளன.

1. பிரயாணப்பையுடன் ஒரு தொகை ஆண்களுக்கான சேட், ஜீன்ஸ்.
2. தங்க கைச்சங்கிலி ஒன்று.

மேற்படி பொருள்களை தவறவிட்டவர்கள் உரிய அடையாளம் காட்டி சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

வலி.கிழக்கு தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம்,
அச்சுவேலி. (14921)

## கேள்வி அறிவித்தல்
### வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினமே மு.ப.10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ.இல. | பாடசாலையும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1) | யா/அராலி வள்ளியம்மை ஞானகார்த்த வித்தி. (தரம் 11 வகுப்பறை மறுசீரமைப்பு) | 250/= | 550/= |

01) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 2002 ஆம் ஆண்டு புதுப்பித்த புத்தகம் கொண்ட எம் 9 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
02) கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT)10% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்வரி (VAT) 10% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03) மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்து, கேள்விப் பத்திரங்களை 25.02.2003 ஆம் திகதியிலிருந்து 28.02.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
04) விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப்படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப் பத்திரங்களின் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரையிடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
05) தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர், தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மருதனார்மடம்,
சுன்னாகம்.
25.02.2003 (சி-26684)

திருமதி றெ.இருதயநாதன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

## முன்பள்ளி விருத்திக்கு திட்டம் தயாரிக்க ஏற்பாடு

யாழ். வலயக்கல்வி அலுவலகப் பிரிவில் இயங்கிவரும் முன்பள்ளி நிலையங்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை வகுக்கும் நோக்குடன், சகல முன்பள்ளிகளின் பிரதிநிதிகள், முன்பள்ளி மேம்பாட்டு நிலையப் பிரதிநிதிகள் மற்றும் வலயக்கல்வி அலுவலக முன்பள்ளிப் பிரிவின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ள ஆலோசனைக் கூட்டம் அடுத்த மாதம் யாழ்.செம்மணி வீதியில் அமைந்துள்ள முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கல்விக் கோட்ட ரீதியாக இக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என்றும்-இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ள முன்பள்ளி பிரதிநிதிகளின் பெயர்களை சகல முன்பள்ளி நிலையங்களும் இன்று செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் யாழ். வலயக்கல்வி அலுவலகத்துக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு யாழ் கல்வி வலயம் அறிவித்துள்ளது. (எ-51)

## குளத்து நீரைப் பாதுகாக்க வேண்டுகோள்!

பளைப் பிரதேசத்தில் உள்ள குளங்களில் தேங்கியுள்ள நீரை மட்டுப்படுத்திப் பயன்படுத்துமாறு பளைப் பிரதேச சபையினர் கோரியுள்ளனர்.

அடுத்துவரும் ஆறுமாதங்களுக்கு இப்பிரதேசத்தில் மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறு இல்லையென வானிலை அவதான நிலையத்தினர் அறிவித்துள்ளதாகவும் - ஆகவே குளத்து நீரைப் பாதுகாக்குமாறும் - பிரதேச சனசமூக நிலையங்களுக்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் இது.சிவராசா அறிவித்துள்ளார். (ஒ-117)

## கூ.சங்க கட்டடங்கள் மார்ச்சில் திறப்பு

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் புதிதாக அமைக்கப்பட்டு வரும் சங்கத்தின் தலைமைக் காரியாலய அலுவலகம், சங்க களஞ்சிய கட்டடங்கள் ஆகியவற்றை எதிர்வரும் மார்ச் மாதமளவில் திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்கத்தின் தலைவர் எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஒ-17)

## ஈழத்து சிதம்பரத்தில் சிவராத்திரி விழா

காரைநகர் சிவன்கோவிலில் எதிர்வரும் முதலாம் திகதி சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நான்கு சாம விசேட அபிஷேகமும், பூசையும் திருவாசக முற்றோதலும் இடம்பெறும்.

மறுநாள் காலை சமுத்திர தீர்த்தம் இடம்பெறும் இந்த இருநாள்களும் போக்குவரத்து சபை விசேட பஸ் சேவைகளை நடத்த உள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## யோகாசன பயிற்சி

முளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் அமைந்துள்ள ஐ.என்.என நிறுவனத்தினரின் பயிற்சி பட்டறையில் யோகாசன வகுப்புக்களை யோக போதனாசிரியர் ந.சிவனேஸ்வரராஜா நடத்திவருகிறார்.இந்த யோகாசனப் பயிற்சியில் கலந்து பயன்பெற ஆர்வமுள்ளோர் மேற்படி நிறுவன இயக்குநர் திருமதி பொன்மலர் இராசேஸ்வரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-28)

## வங்கிக் கிளைகளை நிறுவ நடவடிக்கை

தேசிய சேமிப்பு வங்கி யாழ். மாவட்டத்தில் மேலும் இரு கிளைகளை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது. மானிப்பாயிலும், திருநெல்வேலியிலும் இந்த வங்கிக்கிளைகள் விரைவில் திறக்கப்படவுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

## தேவை

மில்வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை.

தொடர்பு: *பாலன்மில்*
*மாவடிச் சந்தி,*
*வட்டுக்கோட்டை.*

(14915)

## ஆசிரியர் தேவை

யாழ் நகரப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கல்வி நிலையத்தில் தரம் 1-5 வரையான வகுப்பு மாணவர்களுக்கு குழுவாகவும், தனியாகவும் புலமைப்பரிசில் பரீட்சையை மையப்படுத்திக் கற்பிப்பதற்கு திறமையும் தகுதியும் வாய்ந்த ஆசிரியர்கள் தேவை. சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விள.இல.1799, மே/பா உதயன். (14922)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



J/312 கிராம உத்தியோகத்தர்
**திரு.க.வாமதேவன் அவர்கள்**

கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையை இட்டு நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேன்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

*"ஜெயமகால்"*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

திரு.வே.இராஜலிங்கம்
குடும்பத்தினர். (14916)

## பரிசளிப்பு விழாவும் இன்னிசைச் சங்கமமும்

தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய இரண்டாவது "தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழா"வை முன்னிட்டு

நிகழ்வின் இறுதி நாளாகிய இன்று (25.02.2003) செவ்வாய்க்கிழமை பரிசளிப்பு விழாவும் இன்னிசைச் சங்கமமும் இடம்பெறுகின்றது. இந்நிகழ்வில் வெற்றிக்கேடயங்களைத் தமதாக்கிக் கொள்ளும் மாவட்டங்களுக்கான

✳ பரிசில்கள் ✳ பதக்கங்கள் ✳ சான்றிதழ்கள்

வழங்கும் நிகழ்வு முதலாவதாக இடம்பெறும். அதனைத் தொடர்ந்து தமிழீழத்தின் தலைசிறந்த இசைக்கலைஞர்கள் பங்குபற்றும்

"பெரும் இன்னிசைச் சங்கமம்"

இசையமைப்பாளர் முரளியின் இசை நெறியாள்கையில் தமிழீழத்தின் தேசிய பாடகர்கள்

✳ S.G.சாந்தன் ✳ வசீகரன்
✳ ஜெயா சுகுமார் ✳ பிறின்ஸி
✳ திருமலைச் சந்திரன் ✳ மணிமொழி
✳ சந்திரமோகன்

ஆகிய பின்னணிப் பாடகர்கள் பங்கேற்கும் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இப் பெருவிழாவில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழீழ விளையாட்டுத்துறை,
அரசியல்துறை,
தமிழீழம்.

(C/26686)

## கொக்குவில் இந்துக் கல்லூரி
### இல்ல மெய்வல்லுநர் போட்டி-2003

இடம்: கல்லூரி மைதானம்.
காலம்: 2003.02.26 புதன்கிழமை பி.ப.1.30 மணி.
தலைவர்: திரு.பொ.கமலநாதன் (அதிபர்).
பிரதம விருந்தினர்: திரு.செ.குணபாலசிங்கம்
(கி.க.நி.சே - இளைப்பாறிய அதிபர்)
பரிசில் வழங்குபவர்: திருமதி நித்தியலக்சுமி குணபாலசிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியை, கொ.இ.க.,
(இளைப்பாறிய ஆங்கில போதனாசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்)

**பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள்**
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-26691)
அதிபர், ஆசிரியர், மாணவர்.

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் - வலிகாமம் மேற்குப் பிரிவு
## கண்ணீர் அஞ்சலி

அமரர் கார்த்திகேசு சந்திரராசா S.L.A.S.
(ஓய்வுபெற்ற பிரதேச செயலர், சங்கானை -
திட்ட இணைப்பாளர், U.N.H.C.R. யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க, வலி.மேற்குப் பிரிவின் போஷகராகப் போர்ச்சூழல் இருந்த காலத்தில் அன்னார் சங்கத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு, ஆலோசனை வழங்கியிருந்தார். அத்துடன், அவரது அரச சேவை வலிகாமம் மேற்குப் பிரிவு மக்களுக்கு அரும்பெரும் பேறாக அமைந்திருந்தது.

அன்னாரின் திடீர் மறைவு அனைவருக்கும் பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினரின் துயரிலும் பகிர்ந்து கொள்கின்றோம்.

*மாவடி,*
*வட்டுக்கோட்டை.* (14919)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வலி.மேற்கு பிரிவு.

## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை முன்னாள் பிரதேச செயலாளராகவும் யுன்.என்.எச்.சி.ஆர். நிறுவன அதிகாரியாகவும் இருந்து அளப்பரிய சேவையாற்றி அமரராகிவிட்ட

**கார்த்திகேசு சந்திரராசா**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும்!

திரு.க.கலியுகவரதன் (கி.சே.அ), திரு.இ.மு.அருமைநாயகம் (கி.சே.அ), திரு.கி.சண்முகானந்தன் (கி.சே.அ), திரு.சு.தர்மகுலசிங்கம் (கி.சே.அ), திரு.க.பூபாலசிங்கம் (கி.சே.அ).

(14918)

# புத்தளம் தபாலகச் சிற்றூழியர்கள் சுகவீன லீவுப் போராட்டம் முடிவு

## அமைச்சர் அஸ்வரின் முயற்சியால் புதிய நியமனங்களுக்கு உறுதி

புத்தளம் தபால் நிலைய சிற்றூழியர்களின் சுகவீன லீவுப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டது. அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் மேற்கொண்ட முயற்சியாலேயே போராட்டம் முடிவுற்றது.

உடனடியாக 300 சிற்றூழியர்களை நியமிக்கவும், அவர்களில் புத்தளம் தபால் நிலையத்திற்குத் தேவையான சிற்றூழியர்களை நியமிக்கவும் தபால்மா அதிபர் பியசேன அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார். புத்தளம் தபாலகத்திற்கு ஏற்கனவே 19 சிற்றூழியர்கள் தேவைப்படுகின்றனர். இப்போது 9 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். பற்றாக்குறை நிலவுகையில் ஊழியர்கள் மாற்று நியமனம் இன்றி இடமாற்றம் செய்கின்றனர்.

இவற்றை ஆட்சேபித்தே புத்தளம் தபாலக சிற்றூழியர்கள் சுகவீன லீவுப் போராட்டத்தை நேற்று மேற்கொண்டனர். ஊழியர்களின் கோரிக்கை தொடர்பாக அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தபால்மா அதிபர் பியசேனவுடன் தொடர்புகொண்டு பேசினார். அப்போது புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படுமென உறுதியளிக்கப்பட்டது. தபாலக ஊழியர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டதையடுத்து வழமையான வேலைகள் நடைபெறுகின்றன எனவும் அமைச்சர் அஸ்வர் கூறினார். (ம)

## 2ஆவது தேசிய விளையாட்டு விழா:

# கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டத்தில் யாழ். மாவட்ட அணி சம்பியன்!

கிளிநொச்சி,பெப்.25

கிளிநொச்சியில் நடைபெற்றுவரும் 2ஆவது தேசிய விளையாட்டுவிழாவில் கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டம் ஆகியவற்றில் யாழ். மாவட்ட அணி வெற்றிபெற்று சம்பியன கிண்ணங்களைச் சுவீகரித்தது.

கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் நேற்று இரவு மின்னொளியில் நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் அபாரமாக விளையாடிய யாழ். மாவட்ட அணி 64:12 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் மன்னார் மாவட்ட அணியைத் தோற்கடித்து பெருவெற்றியீட்டியது.

இவ் ஆட்டத்தின் ஆரம்பத்தில், பங்குபற்றிய வீரர்கள் விடுதலைப் புலிகளின் மாலதி படையணித்தளபதி கேணல் விதுஷாவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

மின்னொளியில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் மன்னார், யாழ். மாவட்ட அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 25-18, 25-20, 20-25, 25-16 என்ற ரீதியில் புள்ளிகளைப்பெற்று 3:1 என்ற 'செற்' கணக்கில் மன்னார் மாவட்ட அணியைத் தோற்கடித்து சம்பியன் ஆகியது.

விளையாட்டு விழாவில் ஒரு பகுதியாக நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அரையிறுதி ஆட்டத்தில் திருமலை, மட்டக்களப்பு மாவட்ட அணிகள் வெற்றியீட்டி இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றன.

முதலில் நடைபெற்ற திருமலை - அம்பாறை மாவட்ட அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்தில் திருமலை மாவட்ட அணி ஒரு ஓட்டத்தினால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருமலை அணி 14.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அம்பாறை மாவட்ட அணி சிறப்பாக விளையாடியபோதும், 15 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. ஓர் ஓட்டத்தினால் தோல்வி அடைந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் மட்டக்களப்பு - வவுனியா மாவட்ட அணியை 5 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா அணி 15 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மட்டக்களப்பு அணி 9.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றிக்குவேண்டிய 62 ஓட்டங்களைப் பெற்றது. 5 விக்கெட்டுக்களால் வென்றது.

உதைபந்தாட்டப் போட்டி, கிரிக்கெட் ஆகியவற்றின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று இடம்பெறவுள்ளன.

இறுதியாட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**உதைபந்தாட்டம்**

மன்னார் மாவட்ட அணி எதிர் திருமலை மாவட்ட அணி.

**கிரிக்கெட்**

திருமலை மாவட்ட அணி எதிர் மட்டக்களப்பு மாவட்ட அணி.(ம-5-ரி)

## வவுனியாவில் கஞ்சா செடிகள் சிக்கின!

வவுனியா, எல்லப்பன் மருதங்குளம் பகுதியில் சேனைப் பயிருடன் சேர்த்து வளர்க்கப்பட்ட கஞ்சா செடிகளை வவுனியா பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்.

பொலீஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய பொலீஸார் கஞ்சா செடிகளை கண்டுபிடித்து அழித்தனர்.

இது தொடர்பாகப் பெண் ஒருவர் உட்பட மூவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். (ம-3-164)

## ஆஸிக்கு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளையாடுவதற்கு நான் தீர்மானித்துள்ளேன். இதற்கான ஆலோசனைகளை, பேச்சுக்களை நடத்தியுள்ளேன்." - இவ்வாறு பிளவர் தெரிவித்துள்ளார்.

ஸிம்பாப்வே அதிபர் ரொபர்ட் முகாபேவின் ஆட்சியில் 'ஜனநாயகம் செத்துவிட்டது' என்று கூறி, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நமிபியா, இந்தியா அணிகளுக்கு எதிரான போட்டிகளில் அன்டி பிளவர், ஒலங்கா இருவரும் கையில் கறுப்புப்பட்டி அணிந்து விளையாடினர்.

கறுப்புப்பட்டி அணிந்து விளையாடுவதால் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து பிளவர் அறிந்து இருந்தாலும், அடுத்த போட்டிகளில் தனது எதிர்ப்பை தொடர்ந்து வெளிப்படுத்துவது குறித்து அவர் எதையும் தெரிவிக்கவில்லை. ஆனால், 6 மாதங்களில் ஆஸ்திரேலியாவில் விளையாடுவதற்கான சாத்தியம் உள்ளது என அவர் கூறினார்.

பிளவர், ஒலங்கா இருவருடைய இந்தச் செயலுக்காக சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலிடம் புகார் செய்யப்பட்டது. ஆனால், இருவர் மீதும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-5)


# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் சக உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திரு. கனகசிங்கம் அற்புதராசா அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி கனகசிங்கம் இராசம்மா

அவர்கள் 22. 01. 2003 இல் காலமானதையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துன்பதுயரங்களில் நாமும் பங்கேற்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,*
*கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.*
*பணிப்பாளரும் கமத்தொழில் காப்புறுதி சபையினரும்,*
*யாழ்ப்பாணம்.*

(சி-20690)


# மெய்வன்மை போட்டிகள்

நல்லூர் ஞானோதய வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் ஆலய விளையாட்டுத்திடலில் அதிபர் சு.இராசலிங்கம் தலைமையில் இடம்பெறும். (ம)

★ ★ ★

யாழ்நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி அ.சண்முகானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம)

★ ★ ★

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு அதிபர் ச.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நா.ரவிராஜ் பிரதம விருந்தினராகவும், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி பா.[illegible], தமிழ மாணவர் அமைப்பைச் சேர்ந்த என்.இலக்கியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.25

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் பி.முத்துலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். உதவி மோட்டார் திணைக்கள ஆணையாளர் வ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவு விரிவுரையாளர் மா.இளம்பிறையனும் கலந்துகொள்வர். (ம-3)

★ ★ ★

சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் 27ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2மணிக்கு அதிபர் திருமதி லூ.மகேஸ்வரன் தலைமையில் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

நாடாளுமன்ற உறுப்பினர் நா.ரவிராஜ் பிரதம விருந்தினராகவும், யாழ். மனித உரிமைகள் [illegible] நடுநிலைய இயக்குநர் [illegible].பிதா கி.ஜெயக்குமார், யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியுமன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (ம-51)

# இலங்கைக்கு வந்த...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலகுவாக அடுத்த சுற்றுக்கு முன்னேறுவது என்பதே இலங்கையின் நோக்கமாக இருந்தது. ஆனால், சனத் பகிரங்கமாக அழுதது மட்டுமே நடந்தது. அழுது கொண்டே சனத் சொன்னார், "இந்த ஆட்டத்தை நாம் விளையாட்டாக எடுத்துக்கொண்டோம். நாங்கள் சரியான முறையில் ஆடவில்லை. எமது துடுப்பாளர்கள் குறித்து நான மிகவும் மனவருத்தமடைந்துள்ளேன. எங்களால் அந்த இலக்கை நிச்சயம் அடைந்திருக்க முடியும்" - என்று. ஆனால், முடியவில்லை என்பதுதான் அப்பனே உண்மையானது. வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்த கென்ய அணித் தலைவர் டிகோலா, "இது மிக அற்புதமானது. நான் நினைக்கின்றேன், அவரது (ஓடியா) பந்து வீச்சு அவரது வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கும்" - என்றார்.

என்ன நடந்தது இலங்கைக்கு? சாதனைகளில் கண்வைத்தவர்களுக்கு ஏன் இந்தச் சோதனை? நாணயச் சுழற்சியில் வென்றது இலங்கை. பங்களாதேஷையும் கனடாவையும் போன்று இவர்களையும் முதலில் துடுப்பெடுத்தாடக் கேட்டுக்கொண்டார சனத். அப்போது வெற்றி மட்டுமே இலங்கையின் கண்ணுக்குத் தெரிந்தது. ஆரம்பத்தில் இலங்கை நினைத்தே நடந்தது. ஓட்டங்களைக் குவிக்கமுடியும் என்று எதிர்வுகூறப்பட்ட ஆடுகளத்தில் ஓட்டங்களைப்பெற கென்யர்கள் திணறினார்கள். வாஸின் முதலாவது ஓவரின் இரண்டாவது பந்திலேயே கென்யாவின் முதல் விக்கெட் சரிந்தது. டி.ஷா தான் எதிர்கொண்ட முதல் பந்தில் எல்பிடபிள்யூ ஆனார். இலங்கையின் முன்னைய பெறுபேறுகளின் அடிப்படையில் இது அசத்தலான ஆரம்பம்தான். அடுத்து வந்தவர் பட்டேல். அவரையும் மிக விரைவில் 'பெவிலியனுக்கு விரட்டினார் வாஸ். 21 பந்துகளில் 2 பௌண்டரிகளுடன் 12 ஓட்டங்கள் அவர் பெற்றார். வாஸின் அசத்தலான பந்து ஒன்றில் பின்னால் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து அவர் ஆட்டமிழந்தார். 46 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்கள இழப்பு.

ஒருபுறத்தில் வாஸ் விக்கெட்டுக்களை வீழ்த்த அவருடன் இணைந்து கொண்டவர் இலங்கையின் மாயப் பந்துவீச்சாளர் முரளி. அவரும் தன் பங்குக்கு விக்கெட்டுக்களைச் சரித்தார். ஆனால், ஆரம்பத் துடுப்பாளராகக் களமிறங்கிய ஓட்டினோ ஒரு புறத்தில் மிகச் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார். பட்டேலுக்குப் பதிலாக வந்தவர் டிக்கோலா. 22 பந்துகளில் 2 பௌண்டரிகளுடன் 10 ஓட்டங்கள் பெற்றார். முரளியின் பந்தை விக்கெட்டுக்களைக் குறுக்கே மறைத்தவாறு ஆட முயன்றதில் எல்.பி.டபிள்யூ ஆனார். 75 ஓட்டங்களுக்குள் 3விக்கெட்டுக்கள் இழப்பு. கென்யா விரைவில் சுருண்டுவிடும் என்று நினைக்கப்பட்டது.

ஒருபுறத்தில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ஓட்டினோ அரைச் சதத்தை எட்டினார். தொடர்ந்தும் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார். பந்து வீச அரவிந்த அழைக்கப்பட்டார். அவரது பந்தை ஓட்டினோ தூக்கி அடித்தார். பந்து விரைந்து சென்று எல்லைக்கோட்டைக் கடந்தது. அடுத்த பந்தையும் அவர் அப்படியே ஆட முயன்றார். ஆனால், பந்து 'ஓவ்' திசையில் நேர் மேலே எழுந்து சென்றது. முரளி ஓடிவந்து ஏந்திக்கொண்டார். 88 பந்துகளில் 8 பௌண்டரிகள் மற்றும் 2 மிகப் பெரிய சிக்ஸர்கள் சகிதம் ஓட்டினோ 60 ஓட்டங்களைக் குவித்தார். 112 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்கள் இழப்பு. ஆரம்பத்தில் இருந்த கென்யாவின் ஓட்டவிகிதம் நேரம் செல்லச் செல்ல கீழ்நோக்கி இறங்கத் தொடங்கியது. டிக்கோலா போனதும் வந்தவர் மோடி. ஓட்டினோவுக்குப் பதிலாக வந்தவர் ஒடும்பே. இருவரும் இணைந்து சிறிது சிறிதாக ஓட்டங்களைச் சேகரித்துக்கொண்டிருந்தனர். 8ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது முரளியின் பந்தில் மோடி ஒரு 'ஸுவீப்'புக்கு முயன்றார். பந்து நேரே ஜெயசூரியவின் கைகளுக்குச் சென்றது. ஆனால், அழகான அந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டார் ஜெயசூரிய. பின்னர் அரவிந்தவின் பந்தில் மோடியை 'ஸ்டொம்' செய்வதற்கான சந்தர்ப்பம் ஒன்றையும் தவறவிட்டார் சங்ககார. அதிர்ஷ்டம் மோடி பக்கம் இருந்தது. தட்டித் தட்டி அவர் சேகரித்தது 56 பந்துகளில் 26 ஓட்டங்கள். முரளியின் பந்தில் 'ரிவேர்ஸ் ஸுவீப்' ஒன்றுக்கு அவர் முயல முரளியின் பந்து அழகாக இடையில் நுழைந்து விக்கெட்டைத் தின்றது. 152 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் இழப்பு. வந்தவர் ஓட்டோயா. வந்த சிறிது நேரத்தில் அவரை வெளியேற்றினார் மீண்டும் வாஸ். அவர் பெற்றது 15 பந்துகளில் 6 ஓட்டங்கள். 163 ஓட்டங்களுக்கு 6 விக்கெட் இழப்பு. அடுத்த விக்கெட்டும் உடனேயே வீழ்ந்தது. உடும்பேயின் விக்கெட் அது. முரளியின் பந்தை வேகமாக அவர் விளாச, 'மிட் விக்கெட்' திசையில் நின்ற ஆர்னோல்ட் எம்பி ஒரு பிடிபிடித்தார். பந்து அவர் கைகளில். 163 ஓட்டங்களுக்கு 7 விக்கெட் இழப்பு.

வெளியேறிய ஓட்டோயாவைத் தாண்டி வந்தவர் நேற்றைய ஆட்டத்துக்கே சொந்தக்காரரான ஓடியா. உடும்பேக்குப் பதிலாக வந்தவர் சுஜி. பந்துவீச மீண்டும் அழைக்கப்பட்டார் முரளி. வந்த வேகத்தில் முதல் பந்து சுஜியின் விக்கெட்டைக் கொண்டு போனது. 173இறகு 8 விக்கெட் இழப்பு. வந்தவர் ஒங் கோண்டா. 18 பந்துகளில் ஒரு பௌண்டரியுடன் 20 ஓட்டங்களை விளாசினார். ஜெயசூரியவின் பந்தில் அவர் 'போல்ட்'. 205றகு கென்யாவின் 9ஆவது விக்கெட் வீழ்ந்தது. 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது கென்யா. 10 ஓவர்கள் வீசிய முரளி 28 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். உலகக் கிண்ணப் போட்டிகளில் அவரது சிறந்த பெறுபேறு அது. 10 ஓவர்களில் 41 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார் வாஸ்.

நியூஸிலாந்துக்கு எதிராக வெற்றி பெற்றவர்கள். கனடா, பங்களாதேஷ் அணிகளுக்கு எதிராக பெரு வெற்றி பெற்றவர்கள். இப்போது இருக்கும் நிலையில் கிரிக்கெட்டில் ஜாம்பவான்கள். இவ்வளவுக்கும் சொந்தக்காரர்களான இலங்கையர்களுக்கு 210 ஒன்றும் பெரிய இலக்கேயல்ல. அதுவும் கென்யா போன்ற ஓர் அணிக்கு எதிராக அது மிகச் சாதாரணமானது. இப்படித்தான் கிரிக்கெட் ரசிகர்கள் நினைத்தார்கள். ஏன் கென்ய ரசிகர்களும் அப்படித்தான் கருதினார்கள். களமிறங்கியது புகழ்பெற்ற அத்தப்பத்து - ஜெயசூரிய ஜோடி. விரைவிலேயே ஜெயசூரியவின் விக்கெட் சரிந்தது. சரித்தவர் சுஜி. அவரது பந்தை ஜெயசூரிய 'ஓன்' திசையில் தூக்கி அடிக்க பந்து பட்டேலின் கைகளில் சிக்கி பின்னர் வழுக்கி மீண்டும் சிக்கிக்கொண்டது. 3 ஓட்டங்களுடன இலங்கையின் நம்பிக்கை நட்சத்திரம் சரிந்தது. வந்தவர் திலகரத்ன. நியூஸிலாந்துடன் இறுதிவரைக்கும் ஆட்டமிழக்காமல் ஆடியவர். அத்தப்பத்துவுடன் இணைந்தார். பந்து வீச வந்தவர் ஓடியா. துடுப்பாட்டத்தின் அடிப்படைகளைக் கொண்டு சிறப்பாக ஆடுபவர் என்று பெயரெடுத்தவர் அத்தபத்து. முன் காலுக்கும் மட்டைக்கும் இடையில் இடைவெளியின்றி ஆடுவதில் வல்லவர். ஆனால், நேற்று நடந்ததை அவர் விட்ட தவறு என்பதா? இல்லை ஓடியாவின் மாயப் பந்துவீச்சு என்பதா? முன்காலில் சென்று ஆடிய அத்தப்பத்துவின் மட்டைக்கும் காலுக்கும் இடையில் புகுந்து காலை ஓர் உரசுஉரசிவிட்டு விக்கெட்டைப்பதம் பார்த்தது பந்து. 39 ஓட்டங்களுக்கு ஆரம்பத் துடுப்பாளர்கள் இருவரையும் இழந்தது இலங்கை. களத்தில் திலகரத்னவும் அரவிந்தவும் நம்பிக்கையூட்டும் விதத்தில் ஆடினார்கள். ஆனால், 23 ஓட்டங்களைப் பெற்ற திலகரத்ன ஓடியாவின் பந்தை தூக்கி அடிக்க 'லெக் சைட்டில்' எல்லைக்கோட்டின் அருகே நின்ற சுஜி அதனை அழகாக ஏந்திக்கொண்டார். அங்கே தான் இலங்கை அணியின் சரிவு ஆரம்பமானது. அடுத்தடுத்து வந்த ஜேவர்த்தனவும் சங்ககாரவும் சொல்லிவைத்தாற்போன்று தலா 13 பந்துகளில் தலா 5 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினர். சங்ககாரவின் அற்புதமான பிடி ஒன்றை எடுத்தார் ஓடியாவின் சகோதரரும் விக்கெட் காப்பாளருமான ஓட்டினோ. மட்டையில் பட்டு களத்துக்கு முன்னே வெகு அருகில் வீழ்ந்த பந்தை, முன்னோக்கி பாய்ந்து அருமையாகப் பிடித்தார். 87 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து திணற ஆரம்பித்தது இலங்கை.

ஒரு புறத்தில் அரவிந்த சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார். 53 பந்துகளில் 4 பௌண்டரிகள் ஒரு சிக்ஸர் சகிதம 41 ஓட்டங்களைப் பெற்றவேளை மீண்டும் ஓபுஜா தன் கைவரிசையைக் காட்டினார். வலது இலக்குக்கு வெளியே வீழ்ந்து வெளித்திரும்பிய பந்தை 'கட்' செய்ய முயன்றார் அரவிந்த. பந்து மட்டையின் விளிம்பை மென்மையாகத் தொட்டுவிட்டு விக்கெட் காப்பாளரிடம் சரணடைந்தது. 112 ஓட்டங்களுக்கு 6 விக்கெட் இழப்பு தொடர்ந்து வந்த இலங்கை ஆட்டக்காரர்களில் ஆர்னல்ட் தவிர ஏனையோர் மிக மோசமாக ஆடினர். சீரான இடைவெளியில் இலங்கை விக்கெட்டுக்கள் வீழ்ந்து கொண்டிருந்தன. தனது 5ஆவது விக்கெட்டாக வாஸின் விக்கெட்டை வீழ்த்தினார் ஓபுயா. பந்தை வீசி விட்டு வாஸ் ( 4 ஓட்டங்கள்) தூக்கியடிக்க அதையும் அழகாக ஏந்திக்கொண்டார். நிஸங்க (2), முரளி (10), பெர்னான்டோ (7) என்று விக்கெட்டுக்கள் வீழ, 45 ஓவர்களில் 157 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது இலங்கை. 53 ஓட்டங்களால் அதிர்ச்சித் தோல்வியடைந்தது. ஆர்னோல்ட் மட்டும் 37 பந்துகளில் 25 ஓட்டங்களுடன் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார் ஓபுஜா ஆட்ட நாயகன்.

கென்ய அணி தன் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் பெற்ற 10 ஆவது வெற்றி இது. இந்த வெற்றி மூலம் பிரிவு 'பி'யில் இலங்கை அணிக்கு நிகராக 12 புள்ளிகளைப் பெற்றுள்ளது அது. இனி தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷ் அணிகளுடன் அது மோதவுள்ளது. இவற்றில் ஓர் ஆட்டத்தில் வென்றாலும் அந்த அணி 'சுப்பர் சிக்ஸ'க்குச் சென்றுவிடும். இலங்கை தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியா என்ற பலமான இரு அணிகளுடன் மோதவேண்டியுள்ளது. அவற்றில் ஒன்றிலேனும் வென்றால் மட்டுமே அது இலகுவாக 'சுப்பர் சிக்ஸ'க்குள் செல்ல முடியும். இரண்டிலும் தோற்றால் 'சுப்பர் சிக்ஸ்' வெறும் கனவாகலாம். பிரிவு 'பி'யில் கனடா, பங்களாதேஷ் தவிர ஏனைய 5 அணிகளிடையேயும் 'சுப்பர் சிக்ஸ'க்கு செலவதில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

★

# இதுவரை அறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள். இலங்கையின் மும்மொழி ஊடகங்களும் இத்தகவலை வெளியிட்டுள்ளன. அது குறித்து விளக்குவீர்களா?

*நம்பியார்:-* மீள்குடியமர்வை புலிகள் கனரக ஆயுதங்களை கீழே வைப்பதையும் தொடர்புபடுத்தும் எந்த அறிக்கையும் - எந்தக் கட்டத்திலும் - இதுவரை நான் சமர்ப்பிக்கவில்லை.

உயர் பாதுகாப்பு வலய விவகாரம் குறித்து கவனம் செலுத்தும்படியும் அது தொடர்பாக எனது ஆலோசனைகள் ஏதும் இருப்பின் அதைத் தெரிவிக்கும்படியும் இலங்கை அரசு இப்போதுதான் என்னைக் கோரியிருக்கின்றது.

ஆகவே, நான் அத்தகைய பூர்வாங்க அறிக்கை ஒன்றை இலங்கை அரசுக்கு சமர்ப்பித்துள்ளேன் என்று வெளியானதாக நீங்கள் கூறும் தகவல்களில் எந்த உண்மையும் இல்லை.

*கேள்வி:-* அத்தகைய செய்திகள் பெரிய சர்ச்சையை உருவாக்கியுள்ள நிலையில் இதுவரை நீங்கள் அவை குறித்து உங்கள் கருத்தை வெளிப்படுத்தாதது ஏன்?

*நம்பியார்:-* அத்தகைய செய்திகள் வெளியானதாக நான் அறிந்திருக்காததால் அவை குறித்து எனது கருத்தை நான் வெளிப்படுத்தவில்லை.

என்றாலும் அத்தகைய செய்திகள் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது இலங்கை அரசு என்பதே எனது கருத்து. அவர்கள் அப்படி நடவடிக்கை எடுத்திருப்பதாக நான் அறிகிறேன்.

*கேள்வி:-* இலங்கை இராணுவம் தொடர்பாக வேறு அறிக்கை எதனையும் நீங்கள் இலங்கை அரசிற்கு சமர்ப்பித்துள்ளீர்களா?

*நம்பியார்:-* ஆம் "இலங்கை இராணுவத்தில் அதிகாரிகள் நிர்வாகம்" என்ற விடயம் தொடர்பாக இலங்கை அரசிற்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். எனது முன்னைய வருகைகளின்போது இந்த விவகாரம் குறித்து கவனம் செலுத்தும்படி நான் கோரப்பட்டிருந்தேன். அதனால் அது குறித்து அறிக்கை சமர்ப்பித்திருந்தேன்.

*கேள்வி:-* உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களின் மீள்குடியமர்வுக்கு புலிகள் தமது கனரக ஆயுதங்களைக் கீழே வைக்கும் விடயத்தை நிபந்தனையாகக் குறிப்பிடும் அறிக்கை ஒன்றை கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி இலங்கை கண்காணிப்புக் குழுவினர் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத்தார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா. இதற்குச் சரியாக பத்து நாள்களுக்கு முன்னர் வடக்கு இலங்கைக்கு சென்ற நீங்கள், அங்கு ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் இரண்டு அல்லது அதற்குக் கூடிய நாள்கள் ஒன்றாகத் தங்கியுள்ளீர்கள். அவரின் அந்த அறிக்கையில் (முடிவில்) உங்களின் செல்வாக்கு (**Influence**) அதிகம் இருப்பதாகக் கருத்தப்படுகின்றதே. அது குறித்து உங்கள் பதில் என்ன?

*நம்பியார்:-* நான் முன்னர் குறிப்பிட்ட - "இலங்கை இராணுவத்தில் அதிகாரிகள் நிர்வாகம்" என்ற தலைப்பில் நான் கவனிக்க வேண்டிய - விடயம் தொடர்பாகவே யாழ்.பிரிவுக்கு அப்போது நான் விஜயம் செய்தேன்.

படைகளில் உள்ள வழக்கப்படி ஜெனரல் பொன்சேகா என்னை வரவேற்று பல இடங்களுக்கும் கூட்டிச் சென்று விளக்கங்களைத் தந்தார்.

நீங்கள் குறிப்பிடும் அறிக்கைகளில் நாங்கள் உரையாடிய எந்த விடயத்தினதும் பிரதிபலிப்பு இடம்பெற்றிருக்கும் என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

இலங்கை இராணுவத்தின் களமுனைத் தளபதி என்ற வகையில், அவரது பிரிவில் சிலமணிநேரம் தங்கிச் சென்ற ஒருவரின் ஆலோசனையில் தங்கிச் செயற்படவேண்டிய தேவை அவருக்கு நிச்சயமாக இல்லை.

*கேள்வி:-* வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு நீங்கள் நேரடியாக விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொண்டுள்ளீர்கள். இந்த விடயம் தொடர்பாக உங்களின் தீர்மானத்தை இறுதியாக்கி விட்டீர்களா என்பதை அறிய விரும்புகின்றோம். உங்களின் இறுதி அறிக்கையில் இடம்பெறக்கூடிய முக்கிய அம்சங்கள் குறித்து "க்ளு" ஏதும் எமது வாசகர்களுக்கு தருவீர்களா? உங்களின் அறிக்கை எப்போது இலங்கை அருசுக்குச் சமர்ப்பிக்கப்படும்?

*நம்பியார்:-* எனது கடைசி இலங்கை வருகையின்போது உயர் பாதுகாப்பு வலயங்களில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு குறித்து விரிவாக கவனம் செலுத்தும்படி என்னிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பாதுகாப்பு படைத் தளபதிகளின் கருத்துக்கள், சிரத்தைகளைக் கேட்டறிந்ததோடு சிவில் சமுதாயத்தின் நியாயபூர்வமான அளவு பகுதியினரையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் சந்தித்து அந்தத் தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறியவும் நான் முயன்றேன்.

உண்மையில் அதில் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் காரணமாக அது மிகவும் களைப்புத்தரும் அனுபவமாக இருந்தது.

இவ்வாறு நான் உரையாடியோரிடமிருந்து நான் பெற்ற விவரங்கள், மனப் பதிவுகளைப் பரிசீலித்து எனது கருத்துகளை மதிப்பீடு செய்வதில் இப்போது நான் ஈடுபட்டுள்ளேன்.

இன்னும் இருவாரம் அளவில் எனது முன்மொழிவுகளை இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும் என நம்புகிறேன்.

இவ்விடயத்தில் எனது கருத்துக்களை - மிக முக்கியமான இந்தக் கட்டத்தில் - நான் ஊடகப் பிரதிநிதி ஒருவருடன் பகிர்ந்து கொள்ள முடியாது என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறேன். (ம)

## சூச்சவெளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வளைத்துவிட்டனர். இருதரப்புகளுமே ஆயுதங்களை பயன்படுத்துவதற்கும் தயாராக இருந்தனர். கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் அங்கு சென்ற போது நிலைமை மோசமான நிலையை அடைந்திருந்தது.

போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்தான பின்னர் இருதரப்புக்குமிடையே ஏற்பட்டிருந்த மிக மோசமான நிலைமை இதுஎன்றே கூற வேண்டும். பாரதூரமான இந்த நிலைமையை சுமூகமாக முடிப்பதற்கு இரு தரப்பிற்கும் ஒரு திட்டத்தை முன் வைத்தோம். அதற்கேற்ப சில மணி நேரங்களின் பின்னர் பின்வாங்கிச் செல்வதற்கே இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

நாம் புலிகளை எங்களுடைய வாகனங்களில் கூட்டிச்சென்று அவர்களுடைய இடத்தில் விட்டோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புலிகள் கடற்படையினரால் தடுத்து வைக்கப்படவில்லை.

புலிகள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக நிலை எடுத்து நின்றனர். ஆயுதங்களைப் பாவிப்பதற்கு இரு தரப்பினரும் தயாராக இருந்தனர். இந்த மோசமான நிலைமை நல்லவேடியாக தவிர்க்கப்பட்டுள்ளது.

ஆனால், இப்படியான நிலைமை இனிமேல் எப்போது ஏற்படும் என்பது தான் கேள்வியாகவும், கவலையாகவும் இருக்கிறது. ஏனெனில் இந்தச் சம்பவம் இடம்பெற்ற பகுதி யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது என்பதில் எந்தவிதமான தெளிவும் கிடையாது.

சம்பவம் நடந்த இடம் தமது கட்டுப்பாட்டுப் பகுதி என்று புலிகளும், இல்லை தமது கட்டுப்பாட்டுப்பகுதி என இராணுவத்தினரும் கூறுகின்றார்கள் எனவே, இந்தப் பகுதி உண்மையிலேயே யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இந்தக் கருத்து வேறுபாட்டிற்கு இருதரப்புமே தீர்வு காண்பது அவசியம். இந்தப்பணியை செய்ய வேண்டியது அரசும் புலிகளுமே தவிர கண்காணிப்புக்குழு அல்ல. நாங்கள் அவர்களுக்கு இந்த விடயத்தில உதவியாக இருப்போம்.

இருதரப்பினதும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்து 30 நாள்களுக்குள்ளேயே இருதரப்பும் வரையறை செய்திருக்க வேண்டும். ஆனால், அந்த எல்லைகளை வரையறை செய்வது என்பது கடினமான பணி.

அதுவும் இப்படியான காட்டுப் பகுதியில் கட்டுப்பாட்டுப்பகுதிகளை வரையறை செய்வது மிகவும் கடினமான வேலை.

இந்தச்சம்பவத்தில் யுத்தநிறுத்த மீறலில் ஈடுபட்டவர்கள் யார் என்று கூறமுடியாது. ஆனால், இந்தச்சம்பவம் போர்நிறுத்தும் ஒப்பந்தத்தின் உயிர்த்துடிப்பை அழநாதத்தை ஒட்டிய செயலல்ல. இருதரப்பும் நிலைமையை மோசமான திசையில் வளர்த்துள்ளன. அவ்வளவே என்றார்.

(ம)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
பிரபு, கவுண்டமணி, செந்திலின்
எஸ் . மேடம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (14934)



LIONAIR
FLY LIONAIR TO COLOMBO JAFFNA
Safely and in comfort
For Reservations:
Lionair Ticket Office Jaffna
# 1-T, Stanley Road,
Jaffna.
Tel: 0777 - 735992
(C/26688)



DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
'உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பை பெறவும், சுயதொழில் ஆரம்பிப்பதற்கும் தரம் வாய்ந்த சான்றிதழைப் பெற'
உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
♦ Hardware Concepts ♦ Assembling ♦ Upgrading ♦ Troubleshooting ♦ Fault Finding ♦ Repairing ♦ Servicing ♦ Software Installation ♦ Configuring ♦ Networking Etc...
பாடநெறியின் முடிவில் கம்பியூட்டர் ஹார்ட் வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்
குறைந்த கட்டணம்
கூடிய நேர செய்முறைப் பயிற்சி
தமிழில் விரிவுரைகள்
பிரிவு-II ஆரம்பம் 01.03.2003 - 4.00 p.m
JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA SRI LANKA.
REGD NO.:15251
No-07, Palaly Road, Jaffna (இலுப்பையடி சந்தியருகில்)
T.P: 0777-292127


## World Cup Score card - 2003




ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408


நாணயச் சுழற்சி: ஸிம்பாப்வே
ஆட்டநாயகன்: பிளிங்னட் முடிவு: 7 விக்கெட்டுக்களால் ஆஸி. வெற்றி

### ஸிம்பாப்வே

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| சி.விஸாாட் | | b/கிலெஸ்பி | .... | 10 |
| ஜி.விட்டல் | c/ஹொக் | b/கிலெஸ்பி | .... | 01 |
| ஏ.பிளவர் | | b/ஹொக் | .... | 62 |
| ஜி.பிளவர் | run out(மெக்ராத்/கில்கிறிஸ்ட்) | | .... | 37 |
| டி.இப்ராஹிம் | | b/ஹொக் | .... | 15 |
| ரி.தைபு | | b/மெக்ராத் | .... | 23 |
| டி.மரிலியர் | c/பொன்டிங் | b/ஹொக் | .... | 00 |
| ஏ.பிளிங்னட் | c& b/லீ | | .... | 54 |
| ஏச்.ஸ்ரீக் | not out | | .... | 28 |
| பி.மார்பி | | b/மெக்ராத் | .... | 01 |
| டி.ஹொண்டா | not out | | .... | 01 |
| *உதிரிகள்* | | | .... | 14 |
| மொத்தம் | (50 ஓவர்கள்) | | .... | 246/9 |

பந்துவீச்சு

மெக்ராத் : 9-2-24-,2, கிலெஸ்பி : 9-1-50-2, சிமென்ஸ் : 10-1-35-0
லீ : 10-0-63-1, ஹொக் : 8-0-46-3, மார்ட்டின் : 4-0-21-0

### ஆஸ்திரேலியா

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஏ.கில்கிறிஸ்ட் | c/ஏர்வின்(sub) | b/மரிலியர் | .... | 61 |
| எம்.ஹைடன் | c/பிளவர் | b/ஹொண்டா | .... | 34 |
| ஆர்.பொன்டிங் | c&b மார்பி | | .... | 38 |
| டி.மார்டின் | not out | | .... | 50 |
| டி.லெமன் | not out | | .... | 56 |
| *உதிரிகள்* | | | .... | 09 |
| மொத்தம் | (47.3ஓவர்கள்) | | .... | 248/3 |

*களம் இறங்காதவர்கள்:* ஏ.சிமென்ஸ், லீ, ஹொக், ஜி.டி.மெக்ராத், ஜே.கிலெஸ்பி, எம்.பெவன்,

பந்துவீச்சு

ஸ்ரீக் : 6-0-39-0, பிளிங்னட் : 10-0-53-0, ஹொண்டா : 9-0-49-1
விட்டல : 3.3-0-26-0, மரிலியர் : 10-1-32-1, மார்பி : 9-0-48-1

**இன்றைய ஆட்டம்- பெப். 25**

| | | | | |
|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | Vs | நெதர்லாந்து | போர்ள் | 2.00p.m. |

# மேஜர் கதிரொளியின் வித்துடல் விதைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் கதிரொளியின் வித்துடல் நேற்று மாலை 6.30 மணிக்கு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதை குழியில் விதைக்கப்பட்டது.

மாதகலில் உள்ள மேஜர் கதிரொளியின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த வித்துடல் மாலை 3 மணிக்கு மாதகல் தோமஸ் வித்தியாலயத்திற்கு எடுத்துவரப்பட்டது. அங்கு வித்துடலுக்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர். பின்னர் அஞ்சலிக்கூட்டம் இடம்பெற்றது.

மேஜர் கதிரொளியின் தந்தையார் கிருஷ்ணபவான் ஈகச்சுடர் ஏற்றினார்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலைவிழி தலைமையில் நடந்த கூட்டத்தில் கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சோபிதன், சென்.தோமஸ் விளையாட்டுக்கழகத் தலைவர் சிபத்மநாதன், கடற்புலிகளின் தாக்குதல் படைத்தளபதிகளில் ஒருவரான சிறீராம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

அதன்பின்னர் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துவரப்பட்ட வித்துடல் இராணுவ மரியாதைகளுடன் விதைகுழியில் விதைக்கப்பட்டது. (ம-3)

## நிலையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குருமார்களும் மௌலவிகளும் ஆசிகூறினர். பின்னர் பிரார்த்தனை இடம்பெற்றது. 5 நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள தெற்கில் இருந்து மதங்களுக்கிடையிலான சமாதான மன்றத்தின் தேசிய அமைப்பாளரான சர்வமத குழுவின் தலைவர் மாதுலுவேவ அஸாஜி தேரர் தலைமையில் நூறு பிக்குமார்களும் வந்திருந்தனர்.

பௌத்த துறவிகளும் குடாநாட்டில உள்ள இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்களின் குருமார்களும் இணைந்து பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

பிரார்த்தனை முடிவில் குடாநாட்டு மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் தொடர்பாக 25இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் தெற்கில் இருந்து வந்த சர்வமத குழுவிடம் மகஜர்கள் சமர்ப்பித்தனர். (ம-3)


வாகன சாரதிகளும் பத்திரிகை விநியோகஸ்தர்களும் தேவை
★ பத்திரிகை விநியோக நடவடிக்கையில் ஈடுபடுவதற்குச் சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களும், கொழும்பு சென்று வரக்கூடிய வாகன அனுமதிப்பத்திரமுடைய சாரதிகளும் எமது நிறுவனத்தால் ஆட் சேர்க்கப்படவுள்ளனர்.
குறிப்பு: விநியோக நடவடிக்கையில் வாகன அனுமதிப்பத்திரமுள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
தகைமையுடையவர்கள் இன்று (25.02.03) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு (புதிய நேரம்) பணிமனைக்கு நேரில் வரவும்.
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/26687)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.